திருக்கோயில்



நவம்பர்
2003

விலை
ரூ 7.00



திருக்கோயில்

திங்கள் இதழ்

தனி இதழ்	:	ரூ. 7.00
ஆண்டு உறுப்பினர் கட்டணம்	:	ரூ. 75.00
ஆயுள் உறுப்பினர் கட்டணம்	:	ரூ. 1000.00

மாலை 45 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சுபானு - கார்த்திகை நவம்பர் 2003 | மணி 11

சிறப்பாசிரியர்

திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி

"திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திருமிகு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திருமிகு த. சுந்தரம், பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமிகு ஆ. குப்புசாமி, பி.ஏ. பிஎல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திருமிகு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி

முகப்பு

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி

பொருளடக்கம்

பட்டினத்தாரும் பத்திரகிரியாரும்
- திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்

திருமந்திர உபதேசம்
- திருமந்திரச் செம்மல் திருமிகு
டி.வி.வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)

அருளருவி என் முருகப் பெருமான்
- திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,

சமுதாயத்தில் திருக்கோயில்களின் தாக்கம் அன்றும் இன்றும் - திருமிகு வை. பாண்டியன் இ.ஆ.ப.

முனைவர் த. அமிர்தலிங்கம் அவர்கள் "மகாபாரதம்'' நூல் – ஒரு முன்னோட்டம்
- அ. நிறைமதி

இன்னும் ஒரு பெரிய புராணம் மலரட்டும்
- முனைவர் இரா. செல்வகணபதி

ஏன் உறக்கம் கொண்டனையோ?
- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

அவ்வையார் எழுதிய கணபதி ஆசிரியவிருத்தம்
- முனைவர் தாயம்மாள் அறவாணன்

தளர்ச்சிக்கு ஊன்றுகோல் இறைவன்
- பெ. தங்கத்திருமூலர்

திருநின்றவூரில் நின்றருளும் பெருமாளும் ஈசுவரரும் - சிவநேசன்

உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.
தொலைபேசி: 28334811, 28334812, 28334813

பட்டினத்தாரும் பத்திரகிரியாரும்

- திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்து சமய
அறநிலையத்துறை

''ஒட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்த செல்வப்
பட்டினத்தார் பத்திரகிரியார் பண்புணர்வது
எந்நாளோ?''

என்று பட்டினத்தாரையும், பத்திரகிரியாரையும் ஒரு சேர வைத்துப் போற்றுகின்றார் மகரிஷி தாயுமான சுவாமிகள்.

''காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே''

என்று பொருளாசை துறக்க வழிகாட்டும் ஞானி பட்டினத்தார்.

''கால்காட்டிக் கைகாட்டிக் கண்கள் முகம்காட்டி
மால்காட்டும் மங்கையரை மறந்திருப்ப தெக்காலம்?''

என்று பெண்ணாசை துறக்க வழிகாட்டும் ஞானி பத்திரகிரியார்.

இவ்விரு ஞானியர் வரலாறும், ஞாலத்திற்கு வழி காட்டும் ஒப்பற்ற அருள் வரலாறாகும்.

நிதிக்கு அதிபதியான குபேரன் சிவபெருமானுடன் உலகை வலம் வந்த பொழுது காவிரி கடலோடு கூடும் காவிரிப்பூம்பட்டினத்தின் கண்கவர் எழிலில் உள்ளம் பறிகொடுத்தான். இதை அறிந்த சிவபெருமான் ''குபேரனே, இந்நகரை நீ விரும்பியபடியால் நீ இங்குப் பிறப்பாயாக'' என்று ஆணை பிறப்பித்தார். ''உலகமாயையில் சிக்கிவிடாமல் என்னை உரிய காலத்தில் தடுத்தாட்கொண்டு திருவருள் புரிதல் வேண்டும்'' என்று குபேரன் வேண்ட அவ்வாறே அருள் புரிவோம்'' என்று திருவருள் புரிந்தார் சிவ பெருமான்.

சிவபெருமானின் ஆணைப்படி காவிரிப்பூம்பட்டி னத்தில் சிவநேச செட்டியாருக்கும், ஞானகலை அம்மைக்கும் மகனாகப் பிறந்து ''திருவெண்காடர்'' என்ற திருநாமம் கொண்டு வளர்ந்தார் பட்டினத்தார்.

காவிரிப்பூம்பட்டினத்தில் மிகச் சிறந்த தனவந்த ராகத் திகழ்ந்தபடியால் ''பட்டினத்துச் செட்டியார்'' ''பட்டினத்தார்'' என்பதே அவருடைய திருப்பெயராகத் திகழ்ந்தது.

பட்டினத்தார் சிவகலை எனும் மங்கைநல்லாளை மணந்து நல்லறமாகிய இல்லறம் இனிது நடத்தி வந்தார். அகவை முப்பது ஆகியும், மங்கல மனை மாட்சிக்கு எழில் சேர்க்கும் நன்மக்கட்பேறு எனும் செல்வம் வாய்க்கவில்லை.

திருவிடைமருதூர் சென்று மகாலிங்கம் பெரு மானை மனமார விரதங்கள் கொண்டாடி மகப்பேற் றினை வருந்தி வேண்டினார் பட்டினத்தார். ''உரிய காலத்தே உலக மயக்கத்தில் ஆழ விடாமல் உம்மைத் தடுத்தாட் கொள்வோம்'' என்று உறுதி வழங்கியிருந்த கயிலைச் செல்வர் தாமே ஒரு மகவாகி ''சிவசருமர்'' எனும் அருச்சகர் வாயிலாகத் தம் எடைக்கு எடை பொன்னைச் சிவசருமருக்கு வழங்கச் செய்து பட்டினத் தாரின் குழந்தையாக வந்து சேர்ந்து விட்டார்.

''மருதவாணர்'' எனும் பெயரில் நாளொரு மேனி, பொழுதொரு வண்ணமாய் வளர்ந்த பட்டினத்தாரின் செல்வமகனார், தம் பதினாறாம் வயதில் திரைகட லோடித் திரவியம் சேர்க்கக் கப்பலேறிக் கடல் வாணி கம் செய்யப்புறப்பட்டார்.

கடல் கடந்து பற்பல நாடுகளில் வணிகம் புரிந்த மருதவாணர் எருமுட்டைகளும், தவிட்டு மூட்டை களும் வாங்கிக் கொண்டு தாயகம் திரும்ப உடன் வந்த வணிகரெலாம் ''மருதவாணர் பைத்தியம் ஆகி விட் டார்'' எனக் கூறி நகைத்தனர்.

''எருமூட்டைகளை வாங்கி வரவா நீ கடல் வாணி கம் சென்றாய்?'' என்று மருதவாணரைப் பட்டினத்தார் கோபித்துக் கொண்டார்.

மருதவாணராம் கயிலைநாதரும் ஒரு சிறு பெட்டியினைத் தம் தாயாரிடம் கொடுத்து, தந்தையாரிடம் கொடுக்கும் படி கூறித் திருவிடைமருதூர் சென்று லிங்கத்தில் அங்கமாய் மறைந்துவிட்டார்.

உண்மையில் மருதவாணர் கொண்டுவந்த எரு மூட்டைகள் எல்லாம் விலை மதிப்பில்லா மாணிக்க மணிகளை உள்ளடக்கிய அற்புத மூட்டைகளாகத் திகழக்கண்ட பட்டினத்தார் அதிசயப்பட்டுத் தம் இல்லம் ஓடோடி வந்து மகனைத் தேட, மருதவாணர் தந்து சென்ற சிறுபெட்டியைத் தந்தார் அவர்தம் துணைவியார் சிவகலை அம்மையார்.

பட்டினத்தார் அப்பெட்டியைத் திறந்து பார்த்தார். காதற்ற ஊசி ஒன்றும், ஓலைச் சுருள் ஒன்றும் அதனுள் இருந்தது. ஓலையைப் பிரித்துப் படித்தார் பட்டினத்தார். ''காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே'' என்ற வாசகம் அவ்வோலையில் எழுதப்பட்டு இருந்தது.

அவ்வாசகத்தைக் கண்ணுற்ற பட்டினத்தார் மெய்ஞ்ஞானம் பெற்றார். குபேரச் செல்வத்தை அந்நொடியே துறந்து தம் பட்டாடையைக் களைந்து, இடுப்பில் ஒரு கந்தையை அணிந்து பட்டினத்து அடிகளாய் துறவு பூண்டு அருள் ஞானியாய் தம் வீட்டையும் துறந்து புறப்பட்டு விட்டார் பட்டினத்தார்.

''மாடுண்டு கன்றுண்டு மக்கள் உண்டு
என்று மகிழ்வ தெல்லாம்
கேடுண்டு எனும்படி கேட்டுவிட்டோம்
இனிக்கேள் மனமே
ஓடுண்டு கந்தை உண்டு உள்ளே
எழுத்தைந்தும் ஓத உண்டு
தோடுண்ட கண்டன் அடியார்
நமக்குத் துணையும் உண்டே''

என்று திருவாய் மலர்ந்தவராகத் திருவருளைத் தேடிப் புறப்பட்டு விட்டார், மருதவாணரால் தடுத்தாட் கொள்ளப்பெற்ற மாபெரும் அருள் ஞானி நம் பட்டினத்தார்.

''காதற்ற ஊசியும் வாராது காண்'' என்பதைக் கண்டுகொண்டுவிட்ட பட்டினத்தார் தம் கணக்குப் பிள்ளை சேந்தனாரை அழைத்து ''எல்லாச் செல்வத்தையும் அறம் செய்து விடுக'' என்று பொன்னாசையை ஓர் நொடியில் துறந்த அற்புதத்தை வியந்தே தாயுமானசுவாமிகள்.

''பார் அனைத்தும் பொய் எனவே பட்டினத்துப்
பிள்ளையைப் போல் யாரும் துறக்கை அரிது
அரிது''

என்று வியந்து போற்றுகின்றார்.

பட்டினத்தாரின் துறவை அறிந்த சோழமன்னன் பட்டினத்தாரை அணுகித் ''துறவினால் கண்ட பலன் யாது?'' என்று வினவுகின்றான். ''நீர் நிற்க, நாம் இருக்க'' என்று விடையிறுக்கின்றார் பட்டினத்தார். இறைவனுக்கு அல்லால் யாருக்கும் அஞ்சவேண்டிய நிலை ஞானியருக்கு இல்லை. ''துறவிக்கு வேந்தனும் துரும்பு'' என்பதை உணர்த்திவிடுகின்றார் பட்டினத்தார். மன்னனும் பட்டினத்தடிகளை வணங்கி நல்லாசி வேண்டிச் சென்று விடுகின்றான்.

குடியிருந்த மனைக்குக் கொள்ளி வைக்கும் வரையில் திருவெண்காட்டிலேயே தங்கி இருப்பேன் என்று தம் தாயாருக்கு உறுதி கொடுத்த பட்டினத்தார், தம் தாயார் மரணம் அடையத் தாம் குடியிருந்த மனையாம் தாயாருக்குக் கொள்ளி வைக்கச் சுடுகாட்டிற்குச் செல்லுகின்றார். ஈரமான வாழை மட்டைகளைச் சிதையடுக்கி, அதன் மேல் தம்தாயுடலைக் கிடத்திப் பட்டினத்தார் பாட அவரது ஞானாக்கினியால் சிதை எரிந்து தாயுடல் தகனமாகின்றது.

பட்டினத்தடிகள் தம் தாயாரை நினைந்து பாடிய பாடல்கள் ஞானியராலும் மறத்தற்கு இயலாதது தாயன்பு என்பதை நமக்குப் புலப்படுத்துகின்றன.

''ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யஇரு
கைப்புறத்திலே ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி''

''முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்?''

''அரிசியோ நான்இடுவேன் ஆத்தா தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியமே
மானே என அழைத்த வாய்க்கு''

''அள்ளி இடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனஅழைத்த தாய்க்கு''

எனப் பட்டினத்தார் பாடப்பாட அவர் தீயிடாமலே தீயுண்டாகி அதில் அவருடைய தாயாரின் மேனி வெந்து சாம்பல் ஆகின்றது.

தம் தாயார் இறைவரின் திருவடி சேர்ந்தார் என்பதையும் உணர்ந்து பட்டினத்தார்.

''வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்துவரங் கிடந்தென்
தன்னையே ஈன்றெடுத்த தாய்''

''வீற்றிருந் தாள்அன்னை வீதிதனில் இருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் -
பால்தெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென் றிரங்காமல்
எல்லாம் சிவமயமே ஆம்''

என்று பாடிப் பாலூட்டிய தாய்க்குப் பால் தெளித்து பெற்ற தாய்க்குத் தாம் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்றி முடிக்கின்றார் பட்டினத்தார்.

''சிவத்தலந்தோறும் சென்று பாடுக'' என்று இறைவர் கட்டளையிட அவ்வாறே திருவாரூர், தில்லை, காஞ்சி முதலான பற்பல தலங்களையும் பாடித் தொழுதவராய் பட்டினத்தார் வடநாட்டிற்கு வருகின்றார்.

உஞ்சேனை மாகாளம் எனும் இடத்தில் விநாயகர் சந்நிதி ஒன்றில் அமர்ந்து சிவஞான நிஷ்டையில் வீற்றிருக்கின்றார் பட்டினத்தார். அரண்மனையில் கொள்ளையடித்து மீண்ட கள்வர்கள் தாம் வேண்டிக் கொண்டபடி விலையுயர்ந்த நவரத்தினமாலையை விநாயகர் மேல் வீச, அம்மாலை நிட்டையில் வீற்றிருந்த பட்டினத்தார் கழுத்தில் விழுந்து விடுகின்றது.

அரண்மனைச் சேவகர்கள் நவரத்தின மாலையுடன் நிட்டையில் அமர்ந்திருந்த பட்டினத்தாரைக் கள்வர் என எண்ணி மன்னன் பத்திரகிரி முன் நிறுத்துகின்றார்கள். பட்டினத்தாரைக் கழுவேற்றச் சொல்கின்றார் பத்திரகிரி மன்னர்.

கழுமரம் ஏறுமுன் பட்டினத்தார் விதியை நொந்து பாடுகின்றார்:

''என்செயல் ஆவது யாதொன்றும் இல்லை இனித்
தெய்வமே
உன்செயல் என்று உணரப் பெற்றேன் இந்த ஊன் எடுத்த
பின் செய்த தீவினை யாதொன்றும் இல்லை பிறப்பதற்கு
முன் செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே''

என்று பட்டினத்தார் பாடக் கழுமரம் தீப்பற்றி எரிந்தது.

மன்னர் பத்திரகிரியார் பட்டினத்தார் காலில் விழுந்து தம்மை மன்னித்து சீடராக ஏற்றுக்கொள்ளும் படி வேண்டுகின்றார்.

மன்னர் பத்திரகிரியார் ஒரு நொடியில் ஞானி பத்திரகிரியார் ஆக மாறிப் பட்டினத்தடிகளுடன் சேர்ந்து கொண்டுவிடுகின்றார்.

பட்டினத்தடிகளும், பத்திரகிரியாரும் தென்னகம் போந்து குற்றாலம், இராமேஸ்வரம், வேதாரண்யம் முதலான பல திருத்தலங்களை வணங்கித் திருவிடைமருதூர் திருத்தலம் வருகின்றார்கள்.

பட்டினத்தார் திருவிடைமருதூர் சிவாலயத்தில் கீழைக் கோபுர வாசலில் வீற்றிருப்பார். அவர் இருக்கும் இடம் தேடி அடியார்கள் எவரேனும் வந்து உருக்கமுடன் வேண்டி அன்னம் உண்ணுமாறு வேண்டினால் அவ்வுணவைக் கைகளால் பெற்று உண்டு, பின் கை கழுவி நிட்டையில் அமர்ந்து விடுவார் பட்டினத்தார்.

பத்திரகிரியார் திருவிடைமருதூர் சிவாலயத்தின் மேலைக் கோபுர வாசலில் வீற்றிருப்பார். அவரிடம் அடியார்கள் தரும் உணவைப் பெற்றுக் கொள்ளப் பிச்சைப் பாத்திரம் ஒன்றும் இருந்தது. தாம் உண்ட உணவு போக மிச்சம் இருந்ததைத் தம்முடன் வாஞ்சையுடன் பழகிய நாய் ஒன்றுக்கும் வழங்கி வந்தார் பத்திரகிரியார்.

ஒரு நாள் திருவிடைமருதூர் இறைவர் கிழவராய்த் தோன்றிப் பட்டினத்தாரிடம் தம்பசிக்கு உணவு தருமாறு கேட்டார். பட்டினத்தார் ''என்னிடம் ஏதும் இல்லை. மேலைக் கோபுர வாசலில் ஒரு குடும்பி உள்ளார். அவரிடம் செல்லும்'' என்று கூறிக் கிழவரை அனுப்பி வைத்தார்.

பிச்சைப் பாத்திரமும், நாய் மேல் தான் கொண்ட வாஞ்சையுமே தம்மைக் குடும்பி எனப் பட்டினத்தார் கூறக்காரணம் ஆகிவிட்டது என்பதை உணர்ந்த பத்திரகிரியார் பிச்சைப்பாத்திரத்தை நாய் மேல் வீசினார். நாயும் உடன் இறந்துவிட்டது.

பத்திரகிரியார் எனும் ஞானியிடம் உணவைப் பெற்று உண்ட நாய் அப்புண்ணியப் பயனால் காசி அரசனுக்கு மகளாகப் பிறந்து வளர்ந்தது. மங்கைப் பருவம் உற்றவுடன் அந்நாய்ப், பெண் முற்பிறவி நினைவு பெற்று பத்திரகிரியாரைத் தரிசிக்க வந்தாள்.

''நாய் அடியாள் நம்மை நாடி வந்துள்ளாள்'' எனப் பட்டினத்தாரிடம் பத்திரகிரியார் கூறினார். அவரை

திருவிடைமருதூர் ஈசனை வணங்குமாறு பட்டினத்தார் அறிவுறுத்த திருவிடைமருதூர் ஈசனை மூவரும் சென்று வணங்கினார்கள்.

அப்போது அப்பெண்ணும், பத்திரகிரியாரும் சந்நிதியில் இறைவருடன் கலந்து மறைந்து விட்டார்கள். தம் சீடரும், சீடருக்கு சீடரான அப்பெண்ணும் முத்தி பெற்றுவிட, ''தமக்கு எப்போது முத்தி?'' என்று வினவுகின்றார் பட்டினத்தார். ''உமக்குப் பேய்க் கரும்பு தித்திக்கும் இடமே முத்தி சித்திக்கும்'' என்று திருவருள் புரிகின்றார் திருவிடைமருதூர் இறைவர்.

பட்டினத்தடிகள் பல தலங்களையும் தரிசித்து, ஆங்கெல்லாம் பேய்க்கரும்பைக் கடித்துப் பார்க்க அக்கரும்பு தித்திக்கவில்லை.

இறுதியாகத் திருவொற்றியூர் வர, அவ்வூரே சிவ லோகம் போல் தோன்றுகின்றது பட்டினத்தாருக்கு.

''வாவிஎல்லாம் தீர்த்தம் மணல்எல்லாம் வெண்ணீறு
காவதங்கள் எல்லாம் கணநாதர் - பூவுலகில்
ஈது சிவலோகம் என்றென்றே மெய்த்தவத்தார்
ஓதும் திருவொற்றி யூர்''

என்று பரவசத்துடன் பாடிப் படம்பக்கநாதரைப் பணிந்து போற்றுகின்றார் பட்டினத்தார்.

திருவொற்றியூர் கடற்கரையில் ஒரு நாள் பேய்க் கரும்பினைக் கடித்துச் சுவைக்க அது பட்டினத்தடிகளுக்கு இனித்தது.

''கண்டங் கரியதாம் கண்மூன்று உடையதாம்
அண்டத்தைப் போல அழகியதாம் - தொண்டர்
உடல் உருகத் தித்திக்கும் ஓங்குபுகழ் ஒற்றிக்
கடலருகே நிற்கும் கரும்பு''

என்று திருவொற்றியூர் இறைவனையே கரும்பாகப் பாடி மகிழ்கின்றார் பட்டினத்தார்.

திருவொற்றியூர் கடற்கரை மணலைத் தம் கரங்களில் எடுக்க அதுவும் சர்க்கரையாக மாறுகின்றது. அதனைச் சிறுவர்களுக்குக் கொடுத்து மகிழும் பட்டினத்தார், தம்மை மூங்கில் கூடை கொண்டு மூடுமாறு சிறுவர்களிடம் கூறுகின்றார். சிறுவர்களும் மூடுகிறார்கள். ஓரிரு முறை கூடையை மூடிச் சிறுவர்கள் அதன் மேல் அமர்ந்து கொள்ள, வெளியிலிருந்து வந்து சிறுவர்களைத் திகைக்கவும், வியக்கவும் செய்கின்றார் பட்டினத்தார். பிறகு வெகு நேரமாகப் பட்டினத்தார் மூடிய கூடையிலிருந்து வெளிப்படாமல் போகவே சிறுவர்கள் கூடையைத் திறந்து பார்க்கிறார்கள். பட்டினத்தார் சிவலிங்கமாக மாறிவிடுகின்றார். இறைவருடன் இரண்டற கலந்து வீடுபேறு பெற்று விடுகின்றார் நம் பட்டினத்தார்.

பட்டினத்தடிகள் வீடுபேறு பெற்ற திருவொற்றியூர்க் கடற்கரையில் இன்றும் பட்டினத்தார் திருக் கோயில் சிறப்புடன் திகழக் கண்டு, அவர் தம் திருவடிகளைப் போற்றி வணங்கி மகிழ்வுறலாம்.

பட்டினத்தடிகள் பாடியருளிய 1. கோயில் நான் மணிமாலை 2. திருக்கழுமல மும்மணிக்கோவை 3. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 4. திருஏகம்ப முடையார் திருவந்தாதி 5. திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது ஆகிய நூல்கள் பதினோராம் திருமுறையிலும் இடம் பெற்றுத் திகழ்கின்றன.

இவையன்றி அவர் பாடியுள்ள தனிப்பாடல்கள் கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பருளும் களிப் பாகத் திகழ்கின்றன. அவ்வருட் பாக்கள் பயில்வாரின் அஞ்ஞான இருள் கெடுத்து மெய்ஞ்ஞான ஒளி கொடுக்கும் அருட்பாடல்கள் ஆகும்.

''ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு உயர்செல்வ
மெல்லாம்
அன்றென்றிரு பசித்தோர் முகம்பார் நல்லறமும்
நட்பும்
நன்றென்றிரு நடுநீங்காமலே நமக்கு இட்டபடி
என்றென்றிரு மனமே உனக்கு உபதேசம் இதே''

என்ற பட்டினத்தாரின் அறிவுரையைப் பின்பற்றி இவ்வுலகில் மக்கள் வாழ முற்படுவார்களே ஆனால் இவ்வையகமே பொன்னுலகமாக, மக்கள் எல்லோரும் சாதி சமயப் பூசல் இன்றிச் சகல செல்வமும் பெற்று இன்புற்று வாழ்வர் என்பது திண்ணம்.

''நாப்பிளக்கப் பொய்யுரைத்து
நவநிதியம் தேடி
நலன்ஒன்றும் அறியாத
நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற
புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலனப்
புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகை அறியீர்
கைவிடவும் மாட்டீர்

கவர் பிளந்த மரத்துளையில்
கால்நுழைத்துக் கொண்டே
ஆப்பதனை அசைத்துவிட்ட
குரங்கு அதனைப்போல
அகப்பட்டீர் கிடந்துழல
அகப்பட்டீரே''

என்ற பட்டினத்தார் பாடல் ''உலகாயதமே மெய்'' என வாடும் மாந்தர் அவல நிலையை உள்ளது உள்ளபடி தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

''நல்லார் இணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ? அகமும் பொருளும்
இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழில் உடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா கச்சி ஏகம்பனே!''

''பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவதில்லை இடைநடுவில்
குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்க அறியாது
இறக்கும் குலாமருக்கு என் சொல்லுவேன் கச்சி ஏகம்பனே''

''ஊரும் சதமல்ல உற்றார் சதம்அல்ல உற்றுப்பெற்ற
பேரும் சதமல்ல பெண்டிர் சதம்அல்ல பிள்ளைகளும்
சீரும் சதமல்ல செல்வம் சதம்அல்ல தேசத்திலே
யாரும் சதம்அல்ல நின்தாள் சதம் கச்சி ஏகம்பனே''

''அன்னை எத்தனை எத்தனை அன்னையோ?
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ?
பின்னை எத்னை எத்தனை பெண்டிரோ?
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ?
முன்னை எத்தனை எத்தனை சென்மமோ
மூடனாய்அடி யேனும் அறிந்திலேன்
இன்னம் எத்தனை எத்தனை சென்மமோ
என்செய்வேன் கச்சி ஏகம்ப நாதனே!''

என்பன போன்ற மணியான பாடல்கள்பல ''திருஏகம்ப மாலை'' நூலில் அமைந்து நம்மை ஞான மார்க்கத் தில் நடமிட வழிகாட்டுகின்றன.

பட்டினத்தார் பாடல்களைப் போன்றனவே பத்திரகிரியார் பாடல்களுமாம். ''பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல்'' எனும் தலைப்பில் அமைந்து விளங்கும் பாடல்களில் சில பின்வருமாறு :

''ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்து
தூங்காமல தூங்கிச் சுகம் பெறுவ தெக்கலாம்?''

''பேய்போற் திரிந்து பிணம்போற் கிடந்துபெண்ணைத்
தாய் போல் நினைத்துத் தவம்முடிப்ப தெக்காலம்?''

''வெட்டுண்ட புண்போல் விரிந்த அல்குற் பைதனிலே
தட்டுண்டு நிற்கை தணிவதுவும் எக்காலம்?''

''கஞ்சா அபினியுடன் கள்ளுண்டு வாடாமல்
பஞ்சா அமிர்தம் பருகுவதும் எக்காலம்?''

''சோற்றுத் துருத்திதனைச் சுமந்து அலைந்து வாடாமல்
ஊத்தைச் சடம்போட்டு உனை, அடைவது எக்காலம்?''

என்றெல்லாம் பத்திரகிரியார் பாடியுள்ள பாடல் களில் மகரிஷி தாயுமானவரும் மனம் பறிகொடுத் துள்ளார் என்பதை நாம் நன்கு உணரலாம்.

ஆகவே தான் பத்திரகிரியார் பாடல்களைப் போன்றே பின்வந்த தாயுமானவர் பாடல்களும் ''எந்நாள் கண்ணி'' என அமைந்து பத்திரகிரியார் பாடல்களை நினைவூட்டுகின்றன.

''சுக்கிலமும் நீரும் சொரிமலமும் நாறும்உடல்
புக்குஉழலும் வாஞ்சைஇனிப் போதும் என்பது எந்நாளோ?
''மெய்வீசும் நாற்றமெலாம் மிக்க மஞ்சளால் மறைத்துப்
பொய்வீசும் வாயார் புலைஒழிவது எந்நாளோ?''
கச்சு இருக்கும் கொங்கை, கரும்பிருக்கும் இன்மாற்றம்
வச்சு இருக்கும் மாதர் மயக்குஒழிவது எந்நாளோ?''

எனப் பற்பல தலைப்புகளில் ''எந்நாள் கண்ணி'' களைப் பாடியுள்ள மகரிஷி தாயுமானவர், பட்டினத்த டிகளையும், பத்திரகிரியாரையும் ஒருங்குவைத்து

''ஒட்டுடன் பற்று இன்றி உலகைத் துறந்த செல்வப்
பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வது எந்நாளோ?''

எனப் பாடியிருப்பதும் ''எந்நாள் கண்ணி'' யில் தான் என்பதைக் காணமுடிகின்றது.

இவ்வாறு மகரிஷி தாயுமான சுவாமிகளுக்கே ஞானவழி காட்டிய ஞானாசிரியர்களாகத் திகழும் அருட்பெரும் ஞானிகள் பட்டினத்தார், பத்திரகிரியார் பண்புணர்ந்து நாமும் இஞ்ஞாலம் தன்னில் நல்வாழ்வு கண்டு இன்புறுவோமாக!

★★★

திருமந்திர உபதேசம்

— ''திருமந்திரச் செம்மல்''
திருமிகு டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)

5

திருமூலர் பெருமான் தன்னுடைய வரலாற்றைச் சொல்லி வரும்பொழுது, ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்றார்.

இதிலே நமக்கு இரண்டு உண்மைகள் கிடைக்கின்றன. திருமூலர் பெருமான் இறையனுபவம் பெற்ற நிலையில் ஒரு வகையான இன்பத்தைத் தம்முள் பெற்று இருக்கின்றார்.

இப்பூலகில் வாழும் அனைத்து மக்களும் இந்த அனுபவத்தைப் பெறலாம் என்ற உண்மையையும் தெரிவிக்கின்றார்.

அவர் பெற்ற இன்பம் எத்தகையது என்பதைத் திருமந்திரத்தில் பல பாடல்களில் படிப்படியாக விளக்கிக் காட்டுகின்றார்.

ஆனால் அவர் பெற்ற இன்பம் நாம் சொல்லி வருகின்ற இன்பம் என்ற அனுபவம் இல்லை என்பதையும் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

மனிதப் பிறவி என்னும் ஒன்றில் இன்பமும் துன்பமும், ஏற்றமும் தாழ்வும், இரவும் பகலும், கோடையும், மாரியும் மாறி மாறி வருகின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த அனுபவம் ஆகும்.

சற்றுச் சிந்தித்துப் பார்க்கும் பொழுது இந்த இன்பத் துன்ப அனுபவங்கள் நம்முடைய புலன்கள், கருவிகள் ஆகியவற்றோடு இணைந்த அனுபவமாக உள்ளது என்பது நன்கு விளங்கும்.

ஐம்புலன்களும் புறத்தே உள்ள பொருள்களைப் பற்றிய செய்திகளை நம் மனத்தின் முன் வைக்கின்றன.

உட்கருவிகளான மனம், புத்தி, சித்தம் போன்றவை அச்செய்திகளைப் பற்றிக் கொண்டு, அவற்றின் மீது விருப்பு, வெறுப்பு ஆகிய உணர்ச்சிகளை உறுதிப்படுத்தி அவ்வுணர்ச்சிகளை வெளிக்காட்டும் வகையில் நம்முடைய ஞான இந்திரியங்களையும், கர்மேந்திரியங்களையும், தூண்டி விடுகின்றன. அதன் விளைவாக நம்முடைய செயற்பாடுகள் எல்லாம் அமைகின்றன.

விருப்பு, வெறுப்பு - உணர்ச்சிகள் நம்முடைய செயற்பாடுகளைத் தூண்டிவிடும் போது, அவற்றினுடைய இயக்கம், அச்செயற்பாடுகளின் விளைவுகளுடன் நின்றுவிடுவதில்லை.

அவற்றால் நம் உள்ளம் ஆழ்ந்த தாக்குதலைப் பெறுகின்றது. இந்தத் தாக்குதலே நம்முடைய வினைகளாக அமைந்து அவற்றின் பயன்களை அனுபவிக்க வேண்டி மேலும் பல பிறவிகளை எடுப்பதற்கு ஏதுவாகிறது.

இவ்வகையில் பார்த்தோம் என்றால் நம்முடைய செயற்பாடுகளால் கிடைக்கும் இன்பமும், துன்பமும் நிலையற்றது. எனவே பொய்யானது. அவற்றை உண்மை எனக் கருதி நாம் செயல்படும் பொழுது நாம் மாயை என்ற சூழலில் அழுந்தி அறியாமை ஆகிய குறைபாட்டுக்கு உள்ளாகின்றோம்.

இத்தகைய குறைபாடு நமக்கு நேரிடுகின்றது என்றும், அது ஒரு காரியம் என்றும், அதற்குக் காரணமாக ஒரு அடிப்படைக் குறைபாடு உள்ளது என்றும், அதுவே ஆணவம் என்றும் மூலமலம் என்றும் தெரிந்து கொள்ளாமல், நான், எனது என்கிற முனைப்பினை மையமாக வைத்து இயங்கி வருகின்றோம் என்பது தான் உண்மை.

இந்தச் சூழ்நிலையில் நாம் ஆணவமலம் உடையவர்கள் என்றும், அதனால் வினைகளைச் செய்து கொண்டு போகின்றோம் என்றும், அதற்காக நிலையற்ற உலகப் பொருள்களை நிலையானது என்கிற தவறான கண்ணோட்டம் உடையவர்கள் ஆகிறோம் என்றும் நம்மால் தெரிந்து கொள்ள முடிவதில்லை.

அவ்வாறு இருந்தும் நாம் ஒரு அனுபவத்தி லிருந்து இன்பம் பெறுகின்றோம் என்று கருதும் பொழுது அது பொய்யானது, மாயையின் காரியம் என்று உணர்ந்து கொள்வதில்லை.

திருமூலர் பெருமான் பெற்ற இன்பம், அத்தகைய இன்பமாக இருக்க முடியாது. தன்னை நிலைபேறு உடைய ஒரு பொருளோடு இணைத்துக் கொண்டு அந்தப் பொருளின் வழியாக பெறும் அனுபவத்தின் மூலமாகக் கிடைக்கும் இன்பமே மேலான, முடிவான, நிலையான இன்பம் என்று தான் உணர்ந்து அதைப் பிறருக்கு அறிவிக்கும் வகையில் திருமூலர் பெருமான் அந்தச் சொல்லைப் பயன்படுத்துகின்றார் என்பது தெரிகிறது.

திருமந்திரம் நிலையான இன்பம் பெறுவது பற்றிய விளக்கங்களை எடுத்துரைக்கின்றது. சிவப் பரம்பொருள் ஒன்றே முழுமுதற்கடவுள் என்று திருவருளாலும், குருவருளாலும் உணர்ந்த பின்னர் இதுகாறும் உடல் மீதும், உலகத்தின் மீதும், வைத்துள்ள பற்றைக் குறைத்துக் கொண்டு சிவப்பரம்பொருளைச் சார்ந்து நின்று அந்தப் பேரறிவுப் பொருளைப் போலவே தானும் ஒரு அறிவுப் பொருள் என்று உணர்ந்து அதுவே உயிராகும் என்று தெரிந்து கொண்டு அந்த உயிரினுடைய இயல்பு என்றுமே சிவத்தைச் சார்வதாகும் என்ற உறுதி பெற்று, அந்தகைய சார்பினை அடைவதற்காக முயற்சிகளை மேற்கொள்ளுவதே உயிரினுடைய சீரிய நோக்கம் ஆகும் என்பதைத் திருமூலர் பெருமான் அருளிச் செய்த பாடல்கள் மூலமாக அறிந்து கொள்வதே இங்கு நம்முடைய நோக்கமாகும்.

ஆனால் நாமெல்லோரும் சகலர்கள் என்கிற நிலையில் உலகத்தோடு இணைந்து இயங்கும்போது பரம்பொருளை அறிந்துகொள்ள விடாமல், மாயையாகிய திரை ஒன்று நம் கண்களை மறைக்கின்றது. ஆகவே அங்கு ஒரு அறியாமை தோன்றுகின்றது.

ஆறறிவு பெற்ற மனிதன் தனது பகுத்தறிவு ஆற்றலைப் பலன்படுத்தி எல்லாவிதமான கலை ஞானங்களைப் பெற்றிருந்தாலும் அந்த ஞானங்கள் அவனுக்கு முடிவாகத் தேவையான இறையனுபவம் கிடைக்க வழி செய்வது இல்லை.

மாறாக, இந்த அறிவும் ஞானங்களும் தடையாகவே அமைகின்றன.

''கல்வி எனும் பல கடல் பிழைத்தும்'' என்பார் மணிவாசகப் பெருமான்.

திருமூலர் பெருமானும் இந்த உணர்வினை

''அறிவு அறிவு என்று அங்கு அரற்றும் உலகம்
அறிவு அறியாமை யாரும் அறியார்
அறிவு அறியாமை கடந்தறி வானால்
அறிவு அறியாமை அழகிய வாறே''

என்று திருமூலரும் எடுத்துக் கூறுகின்றார்.

எனவே இறையறிவும், அனுபவமும் வேறானவை. புலனறிவுக்கு உட்படாதவை. மனம், புத்தி, சித்தம் போன்றவற்றால் இறையனுபவத்தை நிர்ணயிக்க முடியாது.

அவை வெறும் கருவிகள். சித்தாந்தம் அவற்றைச் சடம் என்றே கூறும்.

சடப் பொருளால் சித்துப் பொருளை அறிந்து கொள்ள இயலாது.

சித்துப் பொருளை அறிந்து அந்த அறிவு அனுபவத்தில் மூழ்கித் திளைக்க, உலக அறிவுக்கு மாறாக உள்ளத்தின் உணர்வு நிலையே நமக்குத் துணைபுரியும்.

உணர்வு என்பது இறைவனுடைய திருவருளே ஆகும்.

திருவருளால் கிடைக்கப்பெற்ற ஞானம், உயிரால் உணர்வின் வழி அடையப் பெறுகிறது.

அறிவுக்கு அப்பாற்பட்டது உணர்வு நிலை. இந்த உணர்வு நிலையில் திருவருள் உயிரின் அறிவைத் தெளிவுபடுத்தி உண்மையைப் பதிய வைக்கிறது.

பொய் எது, மெய் எது என்ற அறிவினை உணர்வாகப் பெற்ற உயிரானது மெய் அனுபவத்தால் கிடைக்கும் இன்பத்தை அடைய எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கின்றது.

மெய் அனுபவம் ஆகிய இன்பமே நிலையானது; மாறாதது. வாழ்க்கைத் தளைகளை விலக்கும் தன்மை உடையது. உயிரின் செயற்பாடுகளைத் தூய்மைப் படுத்தி இறப்பு, பிறப்பு ஆகிய சூழல்களில் சிக்க வைக்கும் நிலையிலிருந்து நீக்குகின்றது.

அருளாளர்கள் அருளிச் செய்த தோத்திரங்களும், சாத்திரங்களும் உயிரை இந்த உணர்வு நிலைக்குச் செலுத்தி நிலையான இன்ப அனுபவங்களைப் பெற வைக்கின்றன.

சிவப் பரம்பொருள் ஞானமாக நிற்கும்; திருவருள் உலகெலாம் நிரம்பி உயிரிலும் உள்ளத்திலும் உணர்வு பூர்வமான அனுபவமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்றது.

இதைத் தான் திருமூலர் பெருமான்

''வான் பற்றி நின்ற மறைப் பொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்''

என்றார்.

திருமூலர் பெருமான் அருளிச்செய்தன. சற்றேறக் குறைய மூவாயிரம் மந்திரங்கள். அம்மந்திரங்களை ஆண்டுக்கொரு மந்திரமாக மூவாயிரம் ஆண்டுகளுக்கு உலக மக்களுக்கு அருட் செல்வமாக ஞானக் குவிய லாக - அனுபவப் பொருளாக - இன்ப அனுபவமாக வாரி வழங்கியுள்ளார்.

திருவாவடுதுறையில் இறைவனுடைய திருவடி நிழலில் ''நாள்தொறும் சிந்தை செய்து ஆகமம் செப்ப லுற்றேனே.'' என்று திருமூலர் பெருமான் நமக்குத் தெரி விக்கின்றார்.

இவ்வாறு அவர் இருந்த பொழுது

''இருந்தேன் இக்காயத்தே எண்ணிலிகோடி,
இருந்தேன் இராப்பகல் அற்ற கிடத்தே.''

என்கிறார்.

இரவு, பகல் என்பவை மாறி மாறிவரும் இயற்கை நிலையை எடுத்துக் காட்டுகின்றன. மனித வாழ்க்கை யில் இன்பம், துன்பம், ஏற்றம் தாழ்வு ஆகிய இருமை நிலைகளும் இரவு பகல் போலவே நிலையற்ற தன் மையை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன. இந்த இருமை கடந்து, ஒருமை நிலை ஒன்றினை அடைவதே வாழ்க் கையின் குறிக்கோளாக அமைய வேண்டும் என்று அருளாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

அடியார்களைப் பற்றிச் சொல்லும் பொழுது சுந்தரமூர்த்தி நாயனாரிடம்

''ஒருமையால் உலகை வெல்வார்...
இருமையும் கடந்து நின்றார்.''

என்று சிவபெருமானே விளக்குகின்றார்.

ஒருமை நிலையிலிருந்த திருமூலர் பெருமான் மறைப்பொருளை மந்திரப் பொருள் ஆக்கி அனுபவ மாக நமக்குத் தருகின்றார்.

'ஆகமம் செப்புதல்' என்பது அனுபவத்தைத் தருவது என்ற பொருளைத் தரும்.

உயிருக்கு உயிராக அமைந்துள்ள இறைவனை உயிரானது தன்னுள் கண்டு கொள்வது ஆகம அனுபவம் ஆகும்.

''ஆகமம் ஆகி நின்று
அண்ணிப்பான் தாள் வாழ்க''

என்பார் மணிவாசகப் பெருமான்.

இந்த ஆகம அனுபவம் நமக்கு மூவாயிரம் மந்திரங்களில் கிடைத்துள்ளது. திருமந்திரம், இறை வன் தத்துவப் பொருள் மட்டும்அல்ல, அனுபவத் தில் துய்த்து இன்பம் பெறக்கூடிய பொருள் என்பதை நமக்கு எடுத்து உரைக்கின்றது.

திருமந்திரத்தின் தொகை ''மூவாயிரம் தமிழ்'' என்றும், ''முந்நூறு மந்திரம்'' என்றும், ''முப்பது உப தேசம்'' என்றும் திருமூலர் பெருமான் அருளிச் செய் துள்ள ஒரு பாடலிலிருந்து தெரிகின்றது.

''மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே''

மூவாயிரம் மந்திரங்களைத் தமிழ் என்று எடுத்து ரைக்கின்றார் திருமூலர் பெருமான்.

தமிழ் என்பது ஒரு மொழி மட்டுமல்ல, தமிழ் என்பது இறை அனுபவம். உயிர் இறைவனோடு தொடர்புடைய நேரத்தில் தமிழே அந்தத் தொடர்பாக அமைகின்றது.

உயிர் உலகத்தைக் கடந்த நிலையில் அதன் உள்ளத்தில் எழுவது தமிழ் அனுபவமே.

இறைவனை உள்ளம் உணர்ந்து துய்க்க விரும்பும் பொழுது அதனுடைய அனுபவத்திற்கு ''மாரி'' என்ற பெயர் உண்டு.

இறைவனைப் பற்றிய அறிவினைப் பெற்ற அந்த அறிவிலே திளைத்து இருக்கும் பொழுது உள்ள நிலைக்குக் ''கோடை'' என்பது பெயர்.

எனவே மாரியும், கோடையும் இரண்டு அறிவு நிலைகள். இரண்டிலும் அனுபவம் உண்டு.

ஒன்றிலே உணர்வு பூர்வமான அனுபவம், மற்றதில் அறிவு பூர்வமான அனுபவம் இந்த இரண்டையும் உயிர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக இறைவன் ''ஆரியமும் தமிழும்'' உடனே சொல்கின்றார்.

ஆகமச்சிறப்பு

'மாரியும் கோடையும் வார்பனி தூங்கநின்
றேறியும் நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரியமுந் தமிழும் உடனே சொல்லிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே''

இங்கே திருமூலநாயனார் உபயோகித்த சொல் ''சொல்லி'' என்பதாகும்.

மேலே கூறிய இரண்டு நிலைகளையும் தமிழ்ச் சொல், வடசொல் என இரண்டாலும் இறைவன் உணர்த்துகின்றான் எனவும் திருமூலர் பெருமான் கூறுவார்.

''அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறும்,
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனுமிவ் விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலு மாமே''

ஆகவே இறைவனைப் பொருத்தவரை அறிவு உணர்வு அனுபவங்களை எடுத்துச் சொல்லுகிறார். உணர்த்தவும் செய்கிறார். ஆனால் அவற்றைத் துய்த்து மகிழ வேண்டிய உயிர்கள் செயற்பாட்டில் இறங்க வேண்டும். இங்கு இறைவனுக்கு அத்தகைய பணிகள் இல்லை. ஆனால் அந்தப் பணியைத் தலை மேற் கொண்டு செயல்பட்டால் இறங்கி அனுபவம் பெற்று மற்றவர்களுக்கும் இந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்றால் தமிழ் மொழி பயன்படுத்தப்பட வேண்டும். அம்மொழியே அனுபவமாக அமைய வேண்டும். இறை உணர்வை அனுபவிக்க அந்த மொழியின் துணை இன்றி இயலாது. இது போன்ற உண்மைகள் உணரப்பட வேண்டும் என்றால் அங்கே ''தமிழ் செய்தல்'' வேண்டும்.

பல பிறவிகளில் தவத்தில் நின்று இப்பிறவியில் இறைவனால் நன்றாகப் படைக்கப்பெற்று, உயிரானது தன்னைத் தமிழோடு ஆகமத்தோடு, இணைத்துக் கொண்ட நிலையில் இறையனுபவங்கள் தமிழாக - மந்திரமாக - இறைமொழி அருளாளராகிய திருமூலர் பெருமானிடமிருந்து வெளிவருகின்றது.

''பின்னை நின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

எனவே மூவாயிரம் தமிழ் என்று சொல்லுமிடத்து மூவாயிரம் அனுபவங்கள் தமிழால் செய்யப்பட்டு அனுபவமும் தமிழும் இணைந்த நிலையில் ''திருமந்திரம்'' தத்துவப் பொருளை விளக்குவதுடன் அதை உள்ளத்தில் அனுபவித்து இன்புறவும் வழி செய்கிறது என்று ஏற்றுக் கொள்ளலாம்.

தமிழ் மொழிக்கான இந்த ஆற்றலைத் தெளிவுப் படுத்திய திருமூலர் பெருமானுக்குத் தமிழ்கூறு நல்லுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது. வேறு எந்த மொழியிலும் இயலாத ஒன்றினைத் தமிழ் செய்கின்றது என்பதைக் கருகி நாம் பெருமை அடையலாம்.

புகழ் பெற்ற உலக விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன் அவர்கள் இறை உணர்வைப் பற்றி ஓரிடத்தில் சொல்லும் பொழுது ''இறை அனுபவத்தை நமக்குக் கிடைத்துள்ள மொழிகளால் விளக்குவது என்பது மிக்கக் கடினம் என்றும், இயலாது'' என்றும் சொன்னார்கள்.

ஐன்ஸ்டீன் அவர்களுக்குத் தமிழ் மொழி தெரிந்திருக்குமே ஆனால் ''இறை உணர்வோடு கலந்த மொழி ஒன்று உண்டு என்பதும், அம்மொழி தமிழ் மொழியே'' என்பதையும் அவர் பெருமையுடன் ஏற்றுக் கொண்டு இருந்திருப்பார் எனலாம்.

(தொடரும்)

★★★

திருமந்திரம் ஓதிடுவீர்

திருக்கோயில் செல்வார் திருமந்திர நூல்
உருக்கமுடன் கொண்டு சென்று ஓதின் - பெருக்க
அறமுதலாம் நான்கும் அருள்முதலாம் ஐந்தும்
அறஅருள்வன் முக்கணிறை ஓது.

அருளருவி என் முருகப் பெருமான்

- திருமிகு தா. சந்திரசேகரன், இ.ஆ.ப.,
அரசு சிறப்புச் செயலர்
தமிழ் வளர்ச்சி - பண்பாடு (ம) அறநிலையத்துறை

1. மென்காற்றின் அசையும் மெல்லிய நீர்த் துளியில் அழகு.
2. காலைக் கதிரவனின் கதிரிலே அழகு.
3. கருமணியின் சுழற்சியிலே அழகு.
4. மருண்டு சுற்றும் மான் விழியிலே அழகு.
5. திரண்டு வரும் வெண்ணெயிலே அழகு.
6. பொசுக்கி விட்டு பொங்கி வரும் தீயிலே அழகு.
7. பாசத்தை ஊட்டி தாலாட்டுப்பாடும் தாயின் குரலிலே அழகு.
8. வேல் விழியால் காவியம் பாடும் காதலியின் பார்வையில் அழகு.
9. வாளெடுத்துப் போர் புரியும் வீரமறவனின் தடந் தோளிலே அழகு.
10. ஓடையில் துள்ளி வரும் வெள்ளி நீரில் அழகு.
11. விடியலில் சில்லெனப் பேசும் சிட்டுக்குருவியின் குரலிலே அழகு.
12. மடைதிறந்த வெள்ளமெனத் தடையின்றி பேசும் தமிழ்க் கவியின் குரலிலே அழகு.

இவ்வழகெல்லாம் சேர்த்து பேரழகாய் இருப்பவன் தான் முருகப் பெருமான்.

1. நுணுக்கம் நிறைந்த நூல்பல கற்றிடின் அகிலமே வியக்கும் அறிஞனாகலாம்.
2. கல்வி செழித்தால் கவிஞனாகலாம்.
3. நாவின் பயிற்சியால் நாவலனாகலாம்.
4. கத்தியைத் தீட்டாது புத்தியைத் தீட்டினால் கற்றார் மதிக்கும் கலைஞனாகலாம்.
5. முற்றி முதிர்ந்த முயற்சியின் மூலம் அனைத்தையும் பெறலாம். ஆயினும் புவியில் பெற இயலாதது பேரெழிலாம் (Dazzling beauty - பேரழகு)

பிறரிடமிருந்து நாம் பெற முடியாததும் உலகத்து மாந்தருள் சிலர்க்கமைவதும், ஆசை தருவதும் அழகேயாகும்.

உலகமெல்லாம் கருத்து வேறுபாடு இல்லாது ஒரு சேர விரும்பப்படுவது அழகு ஒன்றுதான். எல்லா சமயத்தவரும் எல்லாவருணத்தவரும், எல்லா மரபினரும், அழகைப் பெரிதும் அவாவுகின்றனர்.

கவிவாணர்கள் கவிகளில் தொடையழகையும், நடையழகையும், சொல்லழகையும், பொருளழகையும், பிற அழகையும் விரும்பி பாடுகின்றனர். ஆடவர் அழகைப் புகழ்கின்றனர். தவத்திற் சிறந்த ஞானியர் கூட மலைச்சாரலின் அழகை, மலர்களின் மயக்கும் அழகை, மணத்தை, வனத்தில் துள்ளித் திரியும் புள்ளி மான் அழகை, சீறிப்பாய்ந்து வேகத்துடன் ஓடும் வேங்கையின் அழகை வருணிக்கின்றனர். நல்ல அழகுடைய பொருளைக் கண்டவுடன் துன்பம் நீங்கி இன்பமயமாய் இயங்குகின்றனர். ஓர் இனிய பாட்டைக் கேட்டால் என்ன அழகாய்ப் பாடுகின்றான் என வியக்கின்றனர். வண்ணமயிலழகு, அன்ன நடையழகு என பேசுகின்றனர். அழகிய நகரம், அழகிய சோலை, அழகிய மலை, அழகிய அருவி, அழகிய பாடல், அழகிய கடல், அழகிய வானம், அழகிய மடவரல், அழகிய குமரன், அழகிய மகவு என்று எல்லாப் பொருள்களிலும் அழகைக் காண்பதால் உலகில் அழகு தோய்ந்து கொண்டிருக்கிறது. அழகை விரும்பாதார் ஒருவருமில்லை. அழகில் ஈடுபடாதார் எவ்வுலகில்தான் இருக்கின்றனர்? உலகம் பண்டைக் காலத்தும் இக்காலத்தும் இனி வருங்காலத்தும், அழகையே விரும்பியது விரும்புகிறது விரும்பும், ஆகவே, அழகின் பெருமையை யாரே இத்தன்மைத்தென அளக்க வல்லார்? ஒரு பொருள் அழகுடையதாயிருந்தால் எவ்வளவு பொருளையும் கொடுத்துப் பெறுகிறார்கள்; அழகுக்கு விலையில்லை. ஓவியத்தின் அழகைக் கண்டு மகிழாதார் யாவர்? நந்தவனத்தின் அழகைக் கண்டு கண் குளிராதார் யாவர்? கடலழகைக் கண்டு களிகூராதார் யாவர்? ஆதலால், அழகினால் பெரிய இன்பம் பெருகுகிறது. ஓர் அழகிய பொருளைக் கண்டவுடனே கண் மட்டுமா மகிழுகிறது? கருத்தும் களிப்புறுகிறது; உள்ளத்தில் உவகையூற்றெடுக்கிறது; உடல் புளகம் போர்க்கிறது. இத்தகைய அழகே ஓர் உருவெடுத்தது போன்றவன் ஒருவன் உண்டு. அவனுக்கு மதனன் என்று பெயர். மதன் என்றால் அழகு என்று பொருள். அழகிற் சிறந்தவனானபடியால்

அவனுக்கு மதனன் என்ற பெயர் வந்தது. அவனை அழகிற் சிறந்தவனென்று காவியங்களும் கருதுகின்றன.

இத்தகைய அழகிற் சிறந்த மன்மதன் ஆயிரங் கோடி ஒன்று சேர்ந்தாலும் நங்குமாரக் கடவுளது பாதத்தின் அழகுக்கு இணை வராது. மாரன் என்றால் மன்மதன் : அம்மன்மதனை தன் அழகினால் முருகன் குற்சிதம் (ஏளனம்) புரிபவனானபடியால் அப்பெருமானுக்குக் குமாரன் என்ற திருநாமம் இலங்குகின்றது. அம்மன்மதனோ கருநிறமுடையோன் : நங்குகப் பெருமானோ செந்நிறமுடையவன், ஆதலால் மன்மதனைக் கருவேள் என்றும், குகமூர்த்தியைச் செவ்வேள் என்றும் ஓதப்படுவதைக் கண்டு தெளிக. ஆனால் அழகற்ற பொருளைக் கண்டாலுங்கூட அப்பொருளின் மீதுள்ள பிரியத்தினால் அழகுடையதாகத் தோன்றும். அழகற்றவனையும் அவனுடைய நண்பன் பிரியமாக நேசிக்கின்றான். பகைவன் கண்ணுக்கும் அழகு என்று ஏற்படுபவனே சிறந்த அழகன். நம் குமாரக் கடவுளை யுத்தகளத்திற்கண்ட சூரபன்மன் அப்பெருமானது பேரழகைக் கண்டு பெரிதும் உவந்து, ஆயிரங்கோடி மன்மதர்களது அழகெல்லாம் திரண்டு ஒன்று கூடினாலும் இச்செவ்வேட் பரமனது தூய திருவடியின் அழகுக்கு நிகராகாது என்றால் இவ்வநாதி மூர்த்தியினது பெரிய வடிவிற்கெல்லாம் உவமை கூற வல்லார் யாவர்? என்று விம்மிதமுற விளம்பியிருத்தலை நன்கு நோக்குக.

''ஆயிரங்கோடி காமர் அழகெலாம் திரண்டொன்றாகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணந்தன்னின்
தூயநல் எழிலுக்காற்றாது என்றிடில் இனைய
தொல்லோன்
மாயிரு வடிவிற்கெல்லாம் உவமையார் பகர வல்லார்?''

\- கந்தபுராணம்

அப்பெருமானது மயில்வாகன சேவையைக் காணுங்கால் எத்தனை இன்பம் அரும்புகின்றது? மரகதமனைய மயிலில் ஆண்டவன் எழுந்தருளிய காலை, அம்மயிலின் மரகதமனைய மேனியும், நீலம் போன்ற கழுத்தும், செம்பொற் சாயலும், இடையிடையே நவரத்தினமிழைத்தாலன்ன பீலியிற் கண்களும் அம்மயில் தோகையை விரித்துளதால் ஓங்கார வட்டத்தைக் காட்டும் ஒளிப்பிரபையும், அதன் மத்தியில் பவளம்போல் நம் குமரன் எழுந்தருளியிருக்கும் பெருமிதமும், பவளமலைமேல் வசந்த காலத்து ஆறு பூர்ண சந்திரன் தோன்றினாலன்ன ஆறு திருமுகங்களும், அம்முடிகளின் மிசை ஆறு இளஞ்சூரியரைப் பதித்தாற்போன்ற நவரத்தின முடிவுகளும், இருமருங்கும் மரகத மலையும் செம்பொன் மலையும் அணைந்ததுபோல் நம் தாயராகிய வள்ளிப் பிராட்டியாரும் தேவகுஞ்சரியாரும் திகழும் தெய்வீகக் கோலத்தையும் காண்பதற்கு இக்கண்கள் இரண்டும் போதுமோ? நாலாயிரங்கண் இருந்தாலும் அப்பேரழகைக் காணுதற்கியலாதே.

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற்பொழில் செங்கோட னைச்சென்று கண்டு
தொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே

\- கந்தரலங்காரம்

அன்போடு வழிபடும் தொண்டர்கள் ஒரு சமயம் தவறு செய்வார்களேனும் நம் அறுமுகத் தெய்வம் முனிவுறாதருளும், கருணைப் பெருங்கடலல்லவா? அப்பெருமானது ஆறுமுக மலர்களிலும் கருணைத் தேன் பொங்கி வழிகிறது.

''புரிபிழை பொறுக்குஞ் சாமி''

\- (புவிக்குன்) திருப்புகழ்

ஏதுபிழை செய்தாலும் ஏழையே னுக்கிரங்கித்
தீது புரியாத தெய்வமே - நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற வாறுநீ பேசு.

\- சிதம்பர சுவாமிகள்

1. முருகப்பெருமான் தமிழரின் தன்னிகரில்லாத் தெய்வம்

அருள் ஊற்று!	அமுத ஆறு
பண்பின் சிகரம்	அன்பின் இமயம்
தேன்மொழியான்	தெள்ளமுது
வானவர்த்தலைவன்	வற்றாத அருள் ஊற்று
கருணைக் கடல்	கலியுகத் தெய்வம்
சக்தித் திருமகன்	அழகிய தமிழ்மகன்
வள்ளிமணாளன்	தேவானைத் துணைவன்

2. தமிழகத்தின் மலையெல்லாம் நிலையாகக் கொலுவிருப்பவன்

3. ''**சேயோன் மேய மைவரை உலகமும்**'' என தொல்காப்பியம் முருகனை **''குறிஞ்சிக் கடவுள்''** எனக் குறிக்கும்.

4. முருகன் நற்பண்புகளின் பசுங்கூட்டம். ''முருகு'' என்றால் என்ன?
''மணம்'', ''இளமை'', ''அழகு'', ''கடவுள் தன்மை'', ''தேன்'' போன்ற பல பொருள்கள் உள்ளன.

5. **''பண்டைத்தன் மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி''** எனும் திருமுருகாற்றுப்படை அவன்பால் தெய்வத் தன்மையும், இளமையும், நலனும் உள்ளன என்பதைச் சொல்லுகிறது.

1. அடியார்கள் தூய்மையான மனத்துடன் ஒருமுறை முருகா என்று நினைக்கினும் அவ்வடியாரது துன்பமாகிய இருளை நீக்கும் விரிசுடர், முருகப் பெருமானே.

அஞ்சு முகந்தோன்றில் ஆறு முகந்தோன்றும்
வெஞ்ச மரந்தோன்றில் வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

- நக்கீரர்

2. பொருளைக் கொடுக்கும் தெய்வம்
அருளைக் கொடுக்கும் தெய்வம்
பிறவிப்பிணியை நீக்கும் தெய்வம் - முருகனே

''கொடிது கொடிது வறுமை கொடிது'' என்றார் ஔவையார். பிறவி நோய், வறுமை நோய் களைய முருகன் திருநாமத்தை ஓத வேண்டும்.

''முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கும்
மிடியாம் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே.

- அலங்காரம்

3. அடியார்க்கெளிய பெருமாளாகிய ஆறுமுகக் கடவுளை நினைந்து அன்பு செலுத்தாதவர், மலைக் குகையில் இருந்து தவம் புரிந்தாலும், அமிர்தம், காயகல்பம் உண்டாலும், சாத்திரங்கள் கற்றாலும், பரகதியை ஒரு போதுங் காணமாட்டார். வேல் பிடித்த வித்தகனது கால் பிடித்தால் எளிதிற் காணலாம்.

மலைமுழையி லுற்றாலென் மாமருந்துண் டாலென்
கலைமுழுதுங் கற்றாலென் காணார் - இலைநிலவு
வேல்பிடித்த கையான் வியன்போரு ரையினிரு
கால்பிடித்தாற் காண்பார் கதி.

- சிதம்பர சுவாமிகள்.

4. முருகப் பெருமானது திருவடிக்குத் தொண்டு பூண்டு இடையறாது பக்தி செய்து அப்பெருமானின் திருவருளை நாம் பெற்றால் நாள்களும், கோள்களும், கூற்றுவனும் பிறவும் நம்மை என் செய்யும்?

''நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே''

''பட்டிக் கடாவில் வருமந்த காவுனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாது விடேன்''

- அருணகிரிநாதர்

வானமிடிந்து தலையில் விழும்படி
வம்பு வந்தாலுமென்னை - யந்தக்
கானமயின் முருகையன் திருவருள்
கைவிட மாட்டாதே.

- பாம்பன் சுவாமிகள்

5. பயணகாலத்தில், துன்பமுற்ற காலத்தில், தளர்வு கொண்ட காலத்தில் பாடும் பாடல்.

''சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்தசெந்நிற
சேயவன் புந்தி கனிசா சாரந்தக சேந்தவென்னிற்
சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளிபொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதருஞ் சேதமின்றே.

- கந்தரந்தாதி

6. *ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே*
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுக மொன்றே
வள்ளியைம ணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம மர்ந்தபெரு மாளே

- திருப்புகழ்

மூலாதாரம், சுவாதிஷ்ட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுக்தி, ஆக்ஞை என்ற ஆறாதாரங்களில் விளங்கும் ஆறுமுகப் பெருமாளாகிய அவனுடைய வனப்பை எழுத வல்லார் யார்?

அருணகிரியாரும் ''எழுதரிய அறுமுகமும்'' என்றார்.

7. குமரக்கடவுள் ஒரு தேசத்தில் மட்டும், ஒரு நாட்டில் மட்டும், ஒரு ஊரில் மட்டும், ஓர் இடத்தில் மட்டும் உறைபவனல்லன். அப்பெருமான் அகண்டமாக பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கின்றான்.

''ஊரி லான்குணங் குறியிலான் செயலிலா னுரைக்கும்
பேரி லானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரி லான்வரல் போக்கிலான் மேலிலான் றனக்கு
நேரி லானுயிர்க் கடவுளா யென்றுரே நின்றான்''

- கந்தபுராணம்



எழும் போதும் வேலுமயிலும் என்பேன்! எழுந்தே மகிழ்ந்து
தொழும் போதும் வேலுமயிலும் என்பேன், தொழுதே உருகி
அழும் போதும் வேலுமயிலும் என்பேன், அடியேன் உடலம்
விழும் போதும் வேலுமயிலும் என்பேன் செந்தில் வேலவனே!

- (பாம்பன் சுவாமிகள்)

துயில் நீங்கி எழும்போதும் வேல் முருகா என்பேன்! அலுவலக
வாயில் நுழைந்து பணிதுவங்கும் போதும் வேல்முருகா என்பேன் - அடியேன்
பாயில் படுத்து உறங்கும் முன்னும் வேல்முருகா என்பேன்! - அடியேன்
ஆயுள் முடியப் போகும் போதும் வேல்முருகா என்பேன்!

- தா. சந்திரசேகரன், ஐ.ஏ.எஸ்.

8. *அஞ்ஞான இருள் கடியும் மெய்ஞ்ஞான பானுவாகிய குமரனை குருவாகி போற்றி அப்பெருமானை தஞ்சமடையாதார் உண்மைப் பொருளை அறிவது மிகவும் அரிது,*

''முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ''

- அனுபூதி

9. *காவிக்கமல் குழலுடன் சேர்த்தே எனைக் காத்திருப்பாய் தூவாக்குல மயில் வாகனனே,*

''வேலாயுதன் ....

''குமரா சரணம் குமரா சரணம்!'' என்கிறார் அருணகிரி நாதர்.

பெறுதற்கரிய மனிதப் பிறவியை எடுத்தும் பிறவியின் நோக்கத்தையுணராமல், பிறவா நெறியை நல்கும் பெருமானை நினையாமல் களியாடல்களிலும், ஏனைய வகைகளிலும் கிடைத்தற்கரிய நேரத்தை அவமே போகவிட்டு வாணாளை வீணாளாகக் கழித்துக் காலச்சக்கரத்துக்காளாகிக் கலங்குகின்றோம். நம்முடைய தகராகாச புண்டரீக வீட்டில் திருநடனம் புரியும் சச்சிதானந்தமூர்த்தியாகிய குகப்பெருமானை எஞ்ஞான்றும் சிந்தித்து வாழ்த்தி வந்திப்போமாக. ஞாலமெங்கும் அவன் புகழேயோங்கி அறநெறி தழைத்து வளர்வதாக.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே!

- கந்தர் அனுபூதி

★★★

சமுதாயத்தில் திருக்கோயில்களின் தாக்கம் - அன்றும், இன்றும்

- திருமிகு வை. பாண்டியன் இ.ஆ.ப.,
சிறப்புப்பணி அதிகாரி
இந்து சமய அறிநிலைய ஆட்சித் துறை, சென்னை.

''கோவில் முழுதுங் கண்டேன் – உயர்
கோபுரம் ஏறிக் கண்டேன்''
''தெப்பக் குளங் கண்டேன் – சுற்றித்
தேரோடும் வீதி கண்டேன்''
''சிற்பச் சிலை கண்டேன் – நல்ல
சித்திர வேலை கண்டேன்
''தூபம் இடுதல் கண்டேன் – தீபம்
சுற்றி எடுத்தல் கண்டேன்''

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் ''கோயில் வழிபாடு'' என்று தலைப்பிட்டு இருபதாம் நூற்றாண்டில் கவிதைப் பாடியுள்ளார்.

இக்''கோயில் வழிபாடு'' இருபதாம் நூற்றாண்டு, இருபத்தொராம் நூற்றாண்டுகளுக்கு உரியது மட்டும் அல்ல. இனி வரும் நூற்றாண்டுகளுக்கும் உரியது.

என்று மனித இனம் தோன்றிச் சிறப்புற்றதோ, அன்றே தெய்வ வழிபாடும் தோன்றிச் சிறப்புற்று பெருமை பெற்றுள்ளது என்பதை நமது இலக்கியங் கள், அகழ்வாராய்வுகள், கல்வெட்டுகள், சரித்திரச் சான்றுகள் யாவும் நமக்கு நன்கு எடுத்துக் காட்டு கின்றன.

''திருக்கோயில் இல்லா ஊர் திருவில் ஊர்'' - அதாவது கோயில் இல்லாத ஊர், ஊரல்ல. அது காடு என்பதைத் திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்தில் பாடியுள்ளார்கள்.

எங்கே கோயில் இல்லையோ, பூசை இல்லையோ, இசை முழக்கம் இல்லையோ, விழாக்களின் கொண் டாட்டம் இல்லையோ அந்த ஊர் சிறந்த ஊராகாது; அது அடர்ந்த காடாகும் என்பதைத் திருநாவுக்கரசு சுவாமிகள்.

''திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்
திருவெண்ணீறு அணியாத திருவில் ஊரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா ஊரும்
பாங்கினொடு பலதளிகள் இல்லா ஊரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரும்
அருப்போடு மலர்பறித்திட்டு உண்ணா ஊரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே''

என்று பாடுகிறார் தேவாரத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள்.

அதைப் போலவே இறைவனுடைய திருநாமம் கூறவேண்டும். அவருடைய பெருமைகளைப் பேச வேண்டும். தினமும் திருக்கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்தல் வேண்டும். வழிபாடு செய்த பிறகே உணவு அருந்துதல் வேண்டும். இவ்வாறு வழிபாடு செய்யாமல் - இறைவனைத் தேடாமல் வெறும் இரையை மட்டும் தேடுவார்களே ஆனால் அவர்கள் சாகப் பிறந்தவர்களே அன்றி வாழப்பிறந்தவர்கள் அல்ல என்றும் திருநாவுக்கரசர் தேவாரத்தில் நமக்கு அறிவுறுத்துகின்றார்.

''திருநாமம் அஞ்செழுத்தும் செப்பார் ஆகில்
தீவண்ணர் திறம்ஒருகால் பேசார் ஆகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழார் ஆகில்
உண்பதன்முன் மலர்பறித்திட்டு உண்ணார் ஆகில்
அருநோய்கள் கெட வெண்ணீறு அணியார் ஆகில்
அளியற்றார் பிறந்தவாறு ஏதோ என்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே!''

என்று திருநாவுக்கரசர் பாடியுள்ள தேவாரமும் கோயில் களின் அவசியத்தை - கோயில் வழிபாட்டின் அவசி யத்தை நமக்கு நன்கு அறிவுறுத்துகின்றது.

திருநாவுக்கரசர், திருமூலர், வள்ளலார், திருவள் ளுவர் - இவர்கள் எல்லாம் மிகச் சிறந்த சிந்தனையாளர் கள் மட்டும் அல்ல. அருளாளர்கள்.

இனிய சொற்களையே கூறவேண்டும். பிறர் மனம் வருந்த இன்னாச் சொல் கூறுதல் கூடாது என்று கடைப்பிடித்து வாழ்ந்த இத்தகைய அருளாளர்களே, ''கோயில் வீண்'' ''கோயில் வழிபாடு வீண்'' என்று நினைப்பவர்களைத் தம் இனிய இயல்புக்கு மாறாகக் கோபித்துக் கடுஞ்சொற்களை 2000 ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளார்கள் என்பது கொண்டும் - இவர்கள் ''திருக்கோயில்'' வழிபாட்டினை எவ்வளவு சிறப்பாகப் போற்றியுள்ளார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

திருமூலர் இறைவனை வழிபடாதவர்கள் விலங்குகள் என்று திருமந்திரத்திலேயே பாடியிருக்கின்றார்.

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரான்அடிப் பேணார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரிய பேறு இழந்தாரே''

என்பது திருமந்திரம்.

''யாவர்க்கும் ஆம் இன்னுரை தானே'' என்று இன்னுரையை இலக்கணமாக வகுத்த திருமூலர் ''பிரான் அடிப் பேணார் பிராணிகள்'' என்று உரைத்துள்ளார் என்றால் திருக்கோயில் வழிபாட்டின் அவசியத்தைக் கருதியே அவ்வாறு உரைத்துள்ளார் - 3000 ஆண்டுகளுக்கு முன்னமேயே உரைத்துள்ளார் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதைப் போலவே வள்ளுவப் பெருந்தகை

''கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின்''

என்று கோயில் வழிபாட்டை மறந்தால் கற்ற கல்வியினால் யாதும் பயனில்லை என்று தெளிவுபடுத்துகின்றார்.

''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'' என்று அருட்பிரகாச வள்ளலார் பாடியிருப்பதில் அவருடைய உள்ளம் எவ்வளவு மென்மையானது என்பதை உணரமுடிகிறது.

அத்தகைய பூப்போன்ற உள்ளம் கொண்ட அருட்பிரகாச வள்ளலார் கூட இறைவழிபாட்டை மறந்தவர்களை - மறுப்பவர்களைக் காணும் போது கொதிப்படைகின்றார்.

இறைவனை வணங்காத தலை எல்லாம் தலை அல்ல. அது மானிடத்தலை ஆகாது. பசுவின் தலை ஆகலாம். பன்றியின் தலை ஆகலாம். பார்த்தாலே கல்லெடுத்துக் கொல்லுகின்ற பாம்பின் தலை ஆகலாம். வெறி நாயின் தலை ஆகலாம். இறைவனை வணங்காத மானிடத் தலை புழுத்தலை என்று அருளாளராகிய அருட்பிரகாச வள்ளலாரே ஆவேசம் கொண்டு பாடியிருப்பதைக் கண்டால் கோயில் வழிபாடு - தெய்வ வழிபாடு எத்தகைய இன்றியமையாதது என்பதை நாம் உணர முடியும்.

''வீட்டேத் தலைவ! நின் தாள் வணங்கார்
தம்விரிதலை சும்
மாட்டேத் தலைபட்டி மாட்டேத்
தலைபுன் வராகத்தலை
ஆட்டேத்தலை வெறிநாய்த்தலை
பாம்பின் அநேந் தலைகற்
பூட்டேந் தலை வெம்புலைத்தலை
நாற்றப் புழுத் தலையே''

வள்ளலார் பாடியுள்ள இப்பாடலிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்கிறோம்?

அருளாளர்கள் எத்தகைய குற்றங்களையும் மன்னித்து மறக்கத்தக்க மாண்புடையவர்களாக உள்ளார்கள். ஆனால் ஒரு போதும் கோயில் கூடாது. தெய்வம் கூடாது என்று கூறுகிறவர்களோடு சமாதானம் செய்து கொள்ள அருளாளர்கள் மனம் சம்மதிக்காது என்பதையே நாம் உணர்ந்து கொள்கிறோம்.

ஏனென்றால் மனித சமுதாய மேம்பாட்டிற்குக் கோயில்களே அடிப்படை - அடிநிலை. ஆகவேதான் கோயிலையும் - கோயில் வழிபாட்டையும் நம் சான்றோர்கள் தொன்றுதொட்டு வற்புறுத்தி வந்துள்ளார்கள்.

ஆகவேதான்

''கோயிலைத் தழுவிய குடிகள்
குடிகளைத் தழுவிய கோயில்''

என்று ஒரு நெறியை வகுத்துள்ளார்கள் நம் சான்றோர்கள்.

அதனால்தான் ஔவையாரும்

''கோயில் இல்லா ஊரில்
குடியிருக்க வேண்டாம்''

என்று அறிவுறுத்தியிருக்கக் காணுகின்றோம்.

நமது நாட்டில் மிகப் பழங்காலத்திலேயே திருக்கோயில்கள் தோன்றி, அவை வளர்ச்சி பெற்று மிக உன்னதமான நிலை கொண்டு திகழ்ந்தன என்பதற்கு நம்முடைய இலக்கியங்களே சான்றாகத் திகழ்கின்றன.

சங்க இலக்கியமான பத்துப்பாட்டு, எட்டுத் தொகை நூல்களிலும், அவற்றிற்கு முற்பட்ட ''தொல் காப்பியம்'' முதலான இலக்கண நூல்களிலும் கூட திருக்கோயில்களின் அவசியமும், சமுதாயத்தில் திருக்கோயில்கள் பெற்றிருந்த மிக இன்றியமையாத நிலையும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களையும், அவற்றிற்குரிய தெய்வங் களையும் தொல்காப்பியம் வரையறுத்துக் கூறுகின்றது.

குறிஞ்சி நிலத்திற்கு உரியவர் முருகக் கடவுள். முல்லை நிலத்திற்குரியவர் திருமால். மருத நிலத் திற்குரியவர் இந்திரன். நெய்தல் நிலத்திற்கு உரியவர் வருணன். பாலை நிலத்திற்கு உரியவர் துர்க்கை, கொற்றவை.

திருமுருகாற்றுப் படையில் முருகப் பெருமா னுக்கு உரிய ஆறுபடை வீடுகள் நக்கீரரால் எடுத்துக் காட்டப்படுகின்றன.

திருப்பரங்குன்றம் முதற் படைவீடு.
திருச்சீரலைவாய் எனப்படும் திருச்செந்தூர்
இரண்டாம் படைவீடு.
திருஆவினன் குடி எனப்படும்
பழநி மூன்றாம் படை வீடு.
திருஏரகம் எனப்படும் சுவாமிமலை
நான்காம் படை வீடு.
குன்று தோறாடல் – குன்றுகள்
யாவும் முருகனின் ஐந்தாம் படைவீடு.
பழமுதிர் சோலை – ஆறாம் படைவீடு.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே குன்று களின் மேலும், எழில் மிகு கடற்கரை ஓரங்களிலும், சோலைகள் நடுவிலும் ஆலயங்கள் அமைக்கும் அரிய கலைத்திறனைக் கற்றிருந்தவர்கள் நம் தமிழ் மக்கள் என்பது நமக்கு எவ்வளவு பெருமைக்கு உரிய செய்தி என்பதை எண்ணிப் பாருங்கள்.

ஆரம்பத்தில் மரங்களின் அடியில் தெய்வ வடிவங் களை வைத்து வழிபட்டுள்ளார்கள்.

அதனை ஒட்டித் தான் இன்றும் **தல மரங்கள்** என்று திருக்கோயிலில் வழங்கப்படுவதைக் காணு கின்றோம்.

ஒவ்வொரு ஆலயத்திற்கும் ஒரு தலமரம் உண்டு.

கடம்ப வனத்தில் தோன்றிய சுயம்புலிங்கம்தான் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர்.

தில்லை வனத்தில் தோன்றிய சுயம்பு லிங்கம்தான் சிதம்பரத்தில் உள்ள லிங்கம்.

இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம்.

மரங்களின் அடியில் உண்டான ஆலயம் பிறகு செங்கற்களால் கட்டப்பட்ட ஆலயங்கள் ஆயின.

பிறகு பல்லவர் காலத்தில் குகைகளைக் குடைந்து கோயில்களை அமைத்தனர். அத்தகைய குகைக் கோயில்களைத் தான் மாமல்லபுரத்தில் இன்றும் கண்டு அதிசயப்படுகின்றோம்.

சோழர் காலத்தில் செங்கற்களால் ஆன கோயில் கள் யாவும் **கற்றளிகளாகப்** புதுப்பிக்கப் பெற்றன.

தஞ்சையில் மலைகளே இல்லாத சமதரைப் பகுதி யில் மிகப் பிரமாண்டமாக இராஜராஜ சோழன் பெருவுடையார் கோயிலை அமைத்து இவ்வுலகையே வியக்கச் செய்துள்ளான்.

கோச்செங்கணான் என்ற சோழமன்னன் சிவ பெருமானுக்கு 70 மாடக் கோயில்கள் கட்டினான் என்று வரலாறு கூறுகின்றது.

அவன் முற்பிறவியில் சிலந்தியாக இருந்தான். அவன் திருவானைக் காவில் சிலந்தியாக இருந்தபோது சிவலிங்கத்தின் மேல் வெயில்படா வண்ணம் தன் வாய் நூலால் வலை பின்ன, அதனை யானை ஒன்று துதிக்கையால் சிதைக்க, யானையின் துதிக்கைக்குள் சென்று சிலந்தி கடிக்க, யானையும் இறந்தது, சிலந்தி யும் இறந்தது.

இறந்து போன சிலந்தி மறுபிறவியில் ''கோச் செங் கணான்'' என்ற சோழ மன்னனாகப் பிறந்து யானைகள் ஏறமுடியாத மாடக் கோயில்கள் - எழுபது திருக்கோ யில்களைக் கட்டிச் சிறப்பினைக் கொண்டான் என்று இலக்கியங்கள் யாவும் இவன் பெருமையைப் போற்று கின்றன.

''சிலந்தியும் ஆனைக்காவிற்
திருநிழல் பந்தர் செய்து
உலந்து அவண் இறந்த போதே
கோச்செங்கணானும் ஆகக்
கலந்தநீர்க் காவிரிசூழ்
சோணாட்சே் சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பித்திட்டார்
குறுக்கைவீ ரட்டனாரே''

என்று திருநாவுக்கரசர் கோச்செங்கணான் வரலாற்றைத் தேவாரத்தில் பாடியுள்ளார்.

ஆழ்வார்களில் திருவரங்கம் மதில்களைக் கட்டிய திருமங்கை ஆழ்வார் கூட கோச்செங்கணான் சிவ பெருமானுக்கு ஆலயம் கட்டியதை நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் பாடிப் போற்றியிருப்பதைக் காணலாம்.

''இருக்கிலங்கு திருமொழிவாய்
எண்டோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபது செய்து
உலகம் ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன்.''

என்று திருமங்கையாழ்வார், சிவனுக்கு ஆலயம் அமைத்த சோழ மன்னனைச் சமய பேதமின்றிப் பாராட்டியுள்ளமை ஒன்றே சமுதாயத்தில் திருக் கோயில்களின் அவசியத்தை நமக்கு உணர்த்துவதாக உள்ளது.

கோயில்கள் அமைக்கும் கலையால் மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுகின்றது. அதுமட்டும் அல்ல. சிற்பக்கலை, ஓவியக்கலை, நாட்டியக்கலை, இசைக் கலை எனக் கலைகள் யாவும் வளர்வது திருக்கோயில் களால்தான்.

ஓதுவார்கள் பண்ணிசையோடு தேவாரம் பாட ராஜராஜன் தஞ்சைப் பெரிய கோயிலில் 49 ஓதுவார் களைப் பணியில் அமர்த்தி நிபந்தம் வழங்கினான் எனக் கல்வெட்டுக் கூறுகின்றது.

அதைப் போல ஆடற்கலை வல்ல நாட்டிய மகளிரைப் பணிக்கு அமர்த்தினான் என்று கல்வெட்டுக் கள் கூறுகின்றன.

கோயில்களின் என்னென்ன விழா நடந்தது என்று திருஞான சம்பந்தர் திருமயிலை தேவாரத்தில் பாடி யிருக்கக் காணுகின்றோம்.

''மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டம் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்''

எனத் தொடங்கும் பதிகத்தில் ஐப்பசி ஓணவிழா, கார்த் திகைத் தீபவிழா, திருவாதிரை விழா, தைப்பூச விழா, மாசிமகவிழா, பங்குனி உத்திர விழா, திருக்குட நீராட்டுவிழா எனப் பற்பல விழாக்கள் திருக்கோயில் களில் நடைபெற்ற சிறப்பினைத் திருஞான சம்பந்தர் விவரித்திருக்கக் காணலாம்.

இவ்விழாக்கள் அனைத்திலும் அன்னதானம் நடைபெற்றது என்கின்றார் திருஞானசம்பந்தர். அன்னதானம் செய்து அடியார்கள் பசிதீரக் காண்பதே ''மண்ணில் பிறந்தார் பெறும் பயன்'' என்று வாழ்க்கை யின் பலன்கள் யாவும் நிறைவேறுவது திருக்கோயில் களால் தான் என்று தெளிவுபடுத்துகின்றார் திருஞான சம்பந்தர். கோயில்கள் என்றால் அங்குத் திருக்குளம் இருக்க வேண்டும் என்று கண்டவர்கள் நம் முன்னோர் கள்.

இன்றைக்கு நமது அரசாங்கம் மழைநீர் சேகரிப்பின் அவசியத்தைக் கூறுகின்றது.

அன்றைக்குத் திருக்குளங்கள் வெட்டுவதன் வாயிலாக நம் முன்னோர்கள் மழைநீர் சேகரிப்பை வற்புறுத்தியுள்ளார்கள் என்று நாம் உணர்ந்து கொள்ளலாம்.

''ஈண்டு தீவினை யாவையும் நீக்கி
இன்பமே தரும் புண்ணிய தீர்த்தம்
வேண்டினார் தமக்கு இட்ட சித்தியதாய்
விளங்கு தீர்த்தம், நன்மங்கல தீர்த்தம்
நீண்ட காப்புடைத் தீர்த்தம், மூன்று உலகில்
நிகழ்த்த சாருவ தீர்த்தமே முதலா
ஆண்டு நீடிய தீர்த்தம் எண்ணில''

என்று திருக்கோயில்களில் திருக்குளங்கள் பற்பல திருப்பெயர்களில் கட்டப்பட்ட சிறப்பினை எண்ணும் போது அவையாவும் மழைநீர் சேகரிப்பு மையங் களாக நம் முன்னோர்கள் வகுத்துள்ள சிறப்பினை நாம் உணர முடியும்.

கோயில்கள் நமக்கு மேற்பட்ட ஒரு சக்தி உள்ளது என்பதை நமக்கு உணர்த்தி நம் அகம்பாவம் மறைய்க் காரணமாக உள்ள ஞானக்கருவூலம்.

கோயில்கள் சிற்பம், ஓவியம், இசை, நாட்டியம், நாடகம் எனப் பல கலைகளும் வளர்க்கும் பல்கலைக் கழகம்.

கோயில்கள் வேத விற்பன்னர்கள், ஸ்தபதிகள், ஓதுவார்கள், கலைஞர்கள், ஓதுவார்கள் எனப் பற்பல ருக்கும் வேலை வாய்ப்பினை வழங்கும் வேலை வாய்ப்பகம்.

கோயில்கள் அன்னதானம், கல்விதானம், மருத்துவ தானம் எனப் பற்பல அறம் வளர்க்கும் அறச்சாலை.

இப்படி கோயில்களின் சிறப்பை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம்.

இத்தகை அருமை பெருமை மிக்கவை நம் ஆல யங்கள் என்பதால்தான் அந்நாளில் மன்னர்கள் பலர் கோவில்கள் கட்டிப் புகழ் கொண்டுள்ளனர்.

கோச்செங்கணான், திருமங்கை யாழ்வார், பூசலார் நாயனார், வாயிலார் நாயினார், மாணிக்க வாசகர், சேக்கிழார், இராஜராஜ சோழன், இராசேந்திர சோழன் என்று வரலாறு கூறும் கோயில் கட்டிய மன்னர்கள் ஏராளம் ஏராளம்.

இவர்களின் பெருமையை எடுத்துச் சொல்வது எளிதல்ல.

வாரியார் சுவாமிகளின் அருள்மொழி

அழுக்கான இடத்தில் நீங்கள் அமருவீர்களா? அமர வெட்கப்படுவீர்கள். அதைப் போலவே உங்கள் மனம் அழுக்காக இருக்குமானால் இறைவன் அங்கே அமர விருப்பப்பட மாட்டான். ஆகவே மனத்தை எப்பொழுதும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

"திருக்கோயில் பொருந்த
ஓர் செங்கல் இவோர் உலகு ஆள்வார்"

என்ற பழமொழி, கோயில் திருப்பணியின் சிறப்பை நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

கி.பி. 15ஆம் நூற்றாண்டில் பராக்கிரம பாண்டியன் என்கிற மாமன்னன், தென் காசியிலே ஒரு ஆலயத்தை அமைக்கின்றான். காசி விசுவநாதர் ஆலயம் போன்றே, தென் காசியில் ஒரு விசுவநாதர் ஆலயத்தை அமைத்திருக்கிற அம்மன்னன், சில பாடல்களைக் கல்வெட்டில் செதுக்கியிருக்கிறான். அப்பாடல் கருத்தை நாம் உணர்ந்து கொண்டால், திருக்கோயில்களின் தாக்கத்தை நாம் உணர்ந்து கொண்டவர்கள் ஆவோம்.

அம்மன்னன் சொல்கிறான் :

இக்கோயில் என்னால் கட்டப்பட்டது அல்ல. இறைவன் அருளால் இறைவனே கட்டிக் கொண்டது. யான் ஒரு கருவி; கர்த்தா இறைவன்தான்.

இக்கோயிலில் வருங்காலத்தில் சில சிதைவுகள் ஏற்படலாம். அப்போது நான் இருக்க மாட்டேன்.

இக்கோயிலில் வருங்காலத்தில் பழுது ஏற்படுமானால் அதைத் திருப்பணி செய்ய பலர் முன் வருவார்கள்.

அத்தகைய அன்பர்களின் திருவடிகளை இப்போதே என் தலைமேல் வைத்து என் நன்றிக் காணிக்கையைச் செலுத்துகின்றேன்.

இறைவன் வாழ்க!
இறையடியார்கள் வாழ்க!
திருக்கோயில்கள் வாழ்க! வாழ்க!

என்பதாக அம்மாமன்னன் கல்வெட்டில் பாடல்களைச் செதுக்கி வைத்துள்ளான் என்றால் அத்தகைய உணர்வுகளைக் கட்டிக் காப்பாற்ற வேண்டிய அவசியம் நமக்கும் உள்ளது என்பதை நான் இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"மனத்தால் வகுக்கவும் எட்டாத கோயில் வகுக்க முன்நின்று
எனைத்தான் பணிகொண்ட நாதன் தென்காசியை என்றும் மண்மேல்
நினைத்தாதரஞ் செய்து தங்காவல் பூண்ட நிருபர் பதம்
தனைத் தாழ்ந்து இறைஞ்சித் தலைமீதில் யானும் தரித்தனனே".

"ஆராயினும் இந்தத் தென்காசி மேவும் பொன்ஆலயத்து
வாரதோர் குற்றம் வந்தால் அப்போது அங்குவந்து அதனை
நேராகவே ஒழித்துப் புரப்பார்களை நீதியுடன்
பாரார் அறியப் பணிந்தேன் பராக்கிரமப் பாண்டியனே".

"அரிகேசரிமன் பராக்கிரம மாறன் அரன்அருளால்
பரிசேர் பொழில்அணி தென்காசிக் கோயில் வகுத்துவலம்
புரிசேர் கடற்புவி போற்ற வைத்தேன்: அன்பு பூண்டிதனைத்
திரிசேர் விளக்கெனக் காப்பார் பொற்பாதம் என் சென்னியதே"

என்று தலைமேற்கொண்டு திருக்கோயில் திருப்பணி செய்வார்களைப் போற்றுவதாகப் பராக்கிரம பாண்டியன் பாடி வைத்துள்ளான்.

நம் தமிழக அரசு அத்தகைய உணர்வோடு நாளும் திருக்கோயில்களைப் போற்றி வருகின்றது. நாமும் அத்தகைய உணர்வோடு திருக்கோயில்களைப் போற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

★★★

முனைவர் த. அமிர்தலிங்கம் அவர்களின் ''மகாபாரதம்'' நூல் — ஒரு முன்னோட்டம்

- நிறைமதி

நூலின் பெயர் : மகாபாரதம்

நூலாசிரியர் : முனைவர் த. அமிர்தலிங்கம்

பக்கங்கள் : 418

விலை : ரூ. 100 (ரூபாய் நூறு மட்டும்)

நூல் வெளியீடு : மணிவாசகம் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.

துவாபர யுகத்தில் நடைபெற்ற மகாபாரத காவிய நிகழ்ச்சிகளை இன்று நிகழ்ந்ததைப் போல் நம் கண் எதிரே கொண்டுவந்து காட்டுகின்றது இவ்வரிய நூல்.

''பதிப்புச் செம்மல்'' பேராசிரியர் முனைவர் ச. மெய்யப்பன் அவர்கள் ''இதிகாசங்கள் இயம்பும் வாழ்க்கை'' எனும் தலைப்பில் அரியதொரு ஆய்வு முன்னுரையை வடித்துள்ளார்கள்.

''ஆசிரியர் த. அமிர்தலிங்கம் பாரதப் பெருங் கதையைப் பழகு தமிழில் உரைநடையில் காவியம் ஆக்கியுள்ளார். தொட்ட தொட்ட இடமெல்லாம் கனிச் சுவை, நூலைப் படிக்கும்பொழுது பழச்சாறு பருகும் இன்பம் பெறுகிறோம்'' என்று ''செந்தமிழ்க் காவலர்'' முனைவர் மெய்யப்பன் அவர்கள் முன்னுரையில் வடித்துள்ள கருத்து, உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை'' என்பதை இந்நூலைப் பயில்வோர் நன்கு உணர்வர்.

நூலாசிரியர், திருக்கோயில் இதழாசிரியர் வரைந் துள்ள முன்னுரை அவர்தம் ''பக்தியின் சிறப்பை''ப் பாங்காய் விவரிக்கும் ஒரு தனிக்கட்டுரை போலவே திகழ்கின்றது.

பலருக்கும் வழிகாட்டத்தக்க அம்முன்னுரையை அப்படியே வழங்குவது சாலப் பயனுடையது என்ப தால் இங்கு அம்முன்னுரையை அப்படியே வழங்கு கின்றோம்.

''சேலம் அரசினர் கல்லூரியில் இளங்கலைத் தமிழ் பயிலும் மாணவனாக நான் திகழ்ந்த 1970-72 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும், மாதங்களில் சிறந்த மார்கழி மாதத்தில் மகாபாரத, இராமாயண இதிகாசங் களை சேலம் கருங்கல்பட்டி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயத்தில் விரிவுரை செய்யும் அரிய பேற்றினை எல்லாம் வல்ல இறையருளால் நான் பெற்றேன்.

என் செஞ்சொல் விரிவுரையைக் கேட்டு இன்புற்ற என் ஊர்மக்கள் 'காவிய விரிவுரைச் செல்வன்' எனும் பட்டமும் வழங்கி இவ்வெளியேனைச் சிறப்பித் தார்கள்.

அப்பொழுது என் உள்ளத்தில் கால்கொண்ட ஆசைதான் பாரதக் காவியத்தை நயம்பட விரிவுரை செய்ததைப் போலவே அதை ஒரு நூலாகவும் ஆக்கித் தமிழ்கூறு நல்லுலகம் பயன்கொள்ள வழங்கிட வேண்டும் என்பது.

காலம் ஓடியது. யான் சென்னைக்கு வந்து முதுகலைத் தமிழ்ப் பயின்று, டாக்டர் பட்டமும் பெற்று, ஒரு நல்ல பணியைத் தேடிக் கொள்ளும் முயற்சியில் என் முருகன் திருவருளை வேண்டி நின்றேன்.

எல்லாம் வல்ல முருகன் திருவருள், பொருள் சேர்க்கும் பெரும் பணிகளைப் பெறுவதை விடவும், இறையருள் சேர்க்கும் தெய்வப் பணியையே நாடுமாறு எளியேனை ஆற்றுப்படுத்தி வந்தது.

''பழநிப் பாமலர்'' எனும் அருள்நூலை யான் 1977இல் யாத்தபோது

''அத்தனும் அன்னை மற்றும்
அன்புற வாகும் வேலோய்
சித்தரும் தேவர் நாளும்
சூழ்தரும் பழநிக் குன்றில்

பத்தியை ஊட்டும் நல்ல
புத்தியைக் கூட்டும் உன்றன்
புத்தகம் பலவும் விற்றென்
பொழுதெலாம் போற்றல் கேட்டேன்

என்று பாடி வேண்டினேன்.

பழநி முருகன் ஒரே நேரத்தில் அரசுக் கல்லூரியில் தமிழ் உதவிப் பேராசிரியர் பணியையும், இந்துசமய அறநிலையத் துறையில் ''திருக்கோயில்'' இதழாசிரியர் பணியையும் தந்து, எதைத் தேர்ந்து கொள்வது என்ற மயக்கத்தில் எனை முன் ஆழ்த்திப் பின் ''திருக் கோயில்'' இதழாசிரியர் பணியையே யான் தேர்ந்து கொள்ளுமாறும் தெளிவு செய்தனன்.

''நீடாழி உலகத்து மறை நாலோடு
ஐந்து என்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன்
மாபாரதம் சொன்ன நாள்
ஏடாக மாமேரு வெற்பாக
அங்கூர் எழுத்தாணிதன்
கோடாக எழுதும் பிரானைப்
பணிந்து அன்புகூர்வாம் அரோ''
- வில்லிபாரதப் பாயுரச் செய்யுள்.

''ஐந்தாம் வேதம்'' என்று ஆன்றோர்களால் சிறப்பிக்கப் பெறும் பெருமை பெற்ற வியாச பார தத்தை நம் செந்தமிழ் மொழியில் ''முத்தமிழ் அடைவு'' என்று சிறப்பிக்கும் வண்ணம் அற்புதக் காவியமாக வழங்கிய பெருமைக்கு உரியவர் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆழ்வார் ஆவார்.

''முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே''

என்று திருப்புகழில் அருணகிரிநாத சுவாமிகள் நம் வில்லிப்புத்தூர் ஆழ்வார் எழுதியுள்ள செந்தமிழ்க் காவியமான வில்லிபாரத நூலையே சிறப்பித்துப் போற்றியுள்ளார் எனலாம்.

அத்தகைய வில்லிபாரத நூலில் இடம்பெற்றுள்ள

''பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்து
இருப்பிலே இருந்து வைகை
ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்தோரென
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளரு கின்றாள்''

என வரும் தமிழ்த்தாய் வணக்கப் பாடலும் நம் நெஞ்சினைக் கவரும் அற்புதப் பாடல் ஆகும்.

தருமத்தைக் காக்க வேண்டி நிகழ்ந்ததான மகாபாரதப் போரில் பஞ்சபாண்டவர்களுக்குத் துணையாகப் பாண்டிய சோழ மன்னர்கள் போரிட்ட அருஞ்சிறப்பை அழகுற வருணித்துள்ளார் நம் வில்லிப்புத்தூர் ஆழ்வார்.

சித்திரை வாகனப் பாண்டியன் அசுவத்தாமாவின் மார்பில் விட்ட அம்புகள், முத்தமிழைப் போல ஆழமாகப் பாய்ந்தன என்று வருணித்திருக்கும் வில்லிப்புத்தூர் ஆழ்வார், தந்தையாகிய சிவபெரு மானையே பிரம்பு கொண்டு முதுகில் அடித்தவனாகிய பாண்டியன், சிவமைந்தன் ஆகிய அசுவத்தாமாவை விட்டுவிடுவானோ? என்று வினவும் வகையில்

''... மூவகைத் தமிழும் போல
சிந்தையிற் குளிக்குமாறு சீலிமுகம் மூன்று
விட்டான்
தந்தையை முதுகு கண்டோன் தனயனுக்கு
இளைக்குமோதான்?''
(பதினேழாம் போர்ச் சருக்கம், 110)

என்று பாடியுள்ள பாடலில் அமைந்து விளங்கும் தமி ழின்பமும் நாம் எண்ணி எண்ணி மகிழத்தக்க ஒன்றா கும்.

சோழ மன்னனுக்குச் ''சென்னி'' என்ற பட்டப் பெயர் எவ்வாறு வந்தது என்று விவரிக்கும் நம் வில்லிப்புத்தூர் ஆழ்வார், அசுவத்தாமாவும், சகுனி முதலான மன்னர்களும் சோழனை வெல்ல முடியாமல் ''வீரப்போரில் நீயே தலையானவன்'' என்று பாராட்டி யதாலேயே சோழருக்குச் ''சென்னி'' எனும் பட்டப் பெயர் அமைந்தது என்று தெளிவுபடுத்தும் வகையில்

''தொல்அமருக்கு நீ சென்னி
என்றவன் புகழ் செப்பி மீளவே''
(பதினேழாம் போர்ச் சருக்கம், 134)

என்று பாடியிருக்கும் பாடலில் அமைந்து விளங்கும் தமிழ் இன்பமும் நாம் எண்ணி எண்ணி மகிழத்தக்க ஒன்றாகும்.

இத்தகைய அருந்தமிழ்க் காவியமான வில்லிபார தத்தில் ஆழங்கால்பட்ட யான் அதனை ''மகாபாரதம்'' எனும் தலைப்பில் நூலாக்கி அதனை ''மணிவாசகர் பதிப்பகம்'' வழி வெளியிடுவதில் அளவிறந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

''பாரதம்'' என்றாலே போர் என்று பொருள். இதனை வில்லிப்புத்தூர் ஆழ்வார்,

''மகாபாரதம் அகற்ற மற்றுஆர்கொல் வல்லாரே!''
(கிருட்டிணன் தூது சருக்கம்)

''பாரதம் இன்றே பற்றறும்''
(பதினான்காம் போர்ச் சருக்கம், 94)

எனவரும் தொடர்களில் தெளிவுபடுத்தியுள்ளார்.

பாரதப் போர் நடைபெற்ற 18 நாட்களில் 18 அக்குரோணி சேனைகள் முழுவதுமாக அழிந்துபட்டமையை மகாபாரதம் நமக்குக் கண்எதிரில் இன்றும் காட்சிகளாய்க் காட்டுகின்றது.

பாண்டவர்களின் ஏழு அக்குரோணி சேனைகளில் உயிர் பிழைத்தவர்கள் பஞ்ச பாண்டவர்கள் ஐவரும், பார்த்தசாரதி, அவர் தம்பி சாத்தகி ஆகிய எழுவர் மட்டுமே.

கௌரவர்களின் பதினோரு அக்குரோணி சேனைகளில் உயிர் பிழைத்தவர்கள் அசுவத்தாமா, கிருபர், கிருதவன்மா ஆகிய மூவர் மட்டுமே.

''யாரோடும் பகை கோளிலன் என்றதன்பின்
போரொடுங்கும் புகழ்ஒடுங்காது''

என்கிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பர்.

இவ்வொப்பற்ற உண்மையையே வில்லிப்புத்தூர் ஆழ்வாரும் துரியோதனன் வாக்காக வைத்து,

''இருகுலத்தில் எமக்கும் அவர்க்கும் இங்கு
ஒரு குலத்தினும் உண்டென வில்லையால்''

''யானும் எம்பியரும் இறந்தோ மேனும்
மானபங்கம் மறந்து தன்நெஞ்சினுக்கு
ஆன தம்பி அளித்தவர் தம்மொடும்
கோனிலம் புரக்கும்படி கூறுவாய்''

என வரும் தொடர்களால் போர்க் கொடுமையைத் தெளிவுறுத்தி இருக்கக் காணுகின்றோம்.

''கெட்ட போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம்'' என்ற புரட்சிக் கவிஞரின் புரட்சிக் கருத்தினைத் தெளிவுறுத்தும் அற்புதக் காவியமே மகாபாரதக் காவியம். இதனைத் தமிழ்கூறு நல்லுலகம் கருத்தூன்றிக் கற்று அமைதி வழியில், அறவழியில் ஆனந்தம் கண்டு வாழ வேண்டுமாய் அன்புடன் வேண்டுகின்றேன்.

- த. அமிர்தலிங்கம்

என முன்னுரையில் நூலாசிரியர் தாம் ''மகாபாரதம்'' எழுதிய வரலாற்றை தம் பக்தி வாழ்க்கையின் பயன் என விவரித்து இருப்பதும், வில்லிபாரதக் காவியத்தையே அருணகிரிநாதர் ''முத்தமிழ் அடைவு'' எனச் சிறப்பித்துள்ளார் என்பதை மேற்கோள்களுடன் விளக்கியும், மகாபாரதக் காவியம் போரை வலியுறுத்தும் காவியம் அல்ல. போரைத் தவிர்க்கக் கூறும் சமாதானக் காவியம் என விவரித்திருப்பதும் போற்றுதலுக்கு உரிய ஒன்றாகும்.

''மகாபாரத காவியம் ஒரு தெள்ளமுது; தேவாமிர்தம்'' எனத் தெளிவுபடுத்தும் வகையில் 418 பக்கங்களில் ஆற்றோட்டமான நடையில் அற்புதமாக விவரித்து எழுதியுள்ளார் நூலாசிரியர்.

''திருக்கோயில்'' இதழிலேயே வாசகர்கள் அனைவரும் படித்துப் பாராட்டும் வகையில் மூன்றாண்டுக் காலம் தொடராக வந்து இந்துசமய அறநிலையத்துறையின் அனுமதியின் பெயரில் ஏற்கனவே நூலாக வெளிவந்து சிறப்பினைப் பெற்ற இம் ''மகாபாரதம்'' நூல், பத்தாண்டுக்கால இடைவெளிக்குப் பிறகு மீண்டும் நூலாக வெளிவந்து இருப்பது பாராட்டிற்கு உரியது.

ஒவ்வொருவர் வீட்டையும் ஒரு நூலகம் அலங்கரிக்க வேண்டுவது அவசியம். அந்நூலகத்தில் முனைவர் த. அமிர்தலிங்கம் அவர்களின் இம் ''மகாபாரதம்'' நூல் முன்வரிசை நூலாக அலங்கரிக்க வேண்டுவது மிக மிக அவசியம்.

ஆசிரியரின் ஆன்மீக அறப்பணி
வாழ்க! வெல்க!

★★★

நல்ல நூல்களைப் பயின்றிடுக!

நவில்தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

- திருக்குறள்

இன்னும் ஒரு பெரிய புராணம் மலரட்டும்

- முனைவர் இரா. செல்வக்கணபதி

பொதுவாகவே கவிஞர்களுக்குச் சமூகநலம் குறித்தத் தொலைதூரப் பார்வை உண்டு. இலக்கிய எழில் குறைந்துவிடாது, தம் சமூக நல் உணர்வுகளைக் கவிஞர்கள் இடைஇடையே பதிவு செய்து வைப்பர்.

நம்மில் பலர் இலக்கியக் கல்வியை ரசனைக்காகவும் பொழுதுபோக்கிற்கு என்றும் கருதிப் பயில்கின்றனர். இலக்கியங்களின் சமூகத் தாக்கங்கள் குறித்துப் பலரும் சிந்திப்பதில்லை.

நூற்றுக்கணக்கான அற இலக்கியங்களுக்குப் பின் வந்தோரால் சொற்பொருள் விளக்கமும், நயவுரைகளுமே எழுதிக் குவிக்கப்பட்டன. சமூகப் பார்வையை இனங்கண்டு காட்டியவர்கள் சிலர் என்றே கூறலாம்.

'காசி நகரப் புலவர்கள் பேசும் உரையைக் காஞ்சியில் இருந்தவாறு கேட்பதற்கு ஒரு கருவி செய்ய வேண்டும்', 'வங்காளத்தில் ஓடி வரும் மிகை நீரைத் திருப்பி, மைய நாடுகளில் பயிர் வளர்க்க வேண்டும்' என்ற கவிஞனின் கனவுகள் மெல்ல மெல்ல நடைமுறையாகும்போது நமக்கு மகிழ்ச்சி மிகுதியாகிறது.

இமயமலையில் நடந்த சிவன் பார்வதி திருமணத்தை, அகத்தியர், பொதியமலையில் கண்டு களித்தார் என்பதைப் பக்திக் கண்ணோட்டத்தோடு மட்டும் பார்க்காமல், அறிவியல் சாத்தியத்துடன் நாம் காண முயன்றிருந்தால் தொலைக்காட்சியைக் கண்டு பிடித்த பெருமை நமக்குக் கிடைத்துவிடும்.

சீவகன் தந்தை, புஷ்பக விமானத்தில் பறந்தான் என்று சிந்தாமணி ஆசிரியர் பதிவு செய்கிறார். திருமூலர், கூடுவிட்டுக் கூடு பாய்ந்தார் என்று சேக்கிழார் சுட்டுகிறார். நாம் சிந்தித்தாக வேண்டும்.

சேக்கிழார் என்றதும் பெரியபுராணம் நினைவுக்கு வருகிறது. அங்கேதான் எத்தனை எத்தனை சமூகம் சார்ந்த சிந்தனைகள்! நமக்குள் வியப்பு விரிகிறது!

திருவாரூரில் சுந்தரருக்கும் - பரவையாருக்கும் ஆரூர் இறைவன் திருமணத்தை நடத்த அருள்பாலித்தான் என்பது ஒரு பதிவு. இறைவன் கருணையும், சுந்தரர் - ஆரூர்ப்பெருமான் நட்பும் இத்தடத்தில் பேசப்பட்டனவே அன்றி. ஒரு கணிகையர் குலப் பெண்ணுக்கும், இறைவன் திருமேனி தீண்டிப் பூசிக்கும் ஆதிசைவருக்கும், இறைவன் திருமணம் நிகழத் துணை நின்றான் என்பதில், சாதியம் கடந்த - ஒரு கலப்புத் திருமண நிகழ்வை - ஒரு சமூக நலத்தை, நாம் இனம் பிரித்துக் காட்டவில்லை.

இறைவனுக்குக் கூட இத்தகைய திருமணங்களில் மறுப்பு ஏதும் இல்லை என்பதை, நாம் வெளிப்படுத்தி இருந்தால், நம் சமய வாழ்வு மேலும் சிறந்திருக்கும்.

''நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்'' என்ற திருத்தாண்டகத் தொடரில்தான் எத்தனை தீரம்! எவ்வளவு துணிவு! முடியாட்சிக் காலத்தில் ஒரு தனிமனிதராக நின்று திருநாவுக்கரசர் எழுப்பிய இந்தக் குரல் ஜனநாயகத்தின் முதல் குரல் என்றோ, தனிமனிதச் சத்தியாக்கிரகத்தின் ஒளிக்கீற்று என்றோ, நாம் பிரகடனப்படுத்தியிருக்க வேண்டும்.

குடந்தையை அடுத்த பழையாறையில், சிவாலயம் ஒன்றை, வேறு சமயத்தார் குப்பைக் கூளங்களால் மறைத்து வைத்துள்ளதை அறிந்து, அப்பரடிகள் உண்ணா நோன்பு மேற்கொள்ளுகிறார். நாடாளும் வேந்தனுக்கு இச்செய்தி எட்டி, அவன் வந்து குப்பைக் கூளங்களை அகற்றச்செய்து வழிபாட்டிற்கு வழி திறந்துவிடுகிறான்.

கொடுங்கோல் மன்னனுக்குக் கட்டுப்பட்ட ஒரு குடிமகன் நான் அல்லேன் என்ற மறுப்பு உரைத்த அதே பாடலில் நான் இறைவனுக்கு மீளா ஆளாய், என்றும் அடிமைப்பட்டு வாழ்வேன் என்றும் பேசி முடிக்கிறார்.

அதிகாரக் கட்டுக்களைத் தகர்த்தெறியும் மனித குலம் அன்புக்குள், அறநெறி வளாகத்துக்குள்,

தம்மைக் கட்டுப்படுத்தி ஆக வேண்டும் என்பது வரம்பற்ற ஜனநாயக உரிமைகளை எதிர்பார்ப்போருக்கு ஒரு எல்லை வகுக்கவில்லையா?

இதைத்தானே மகாகவி பாரதி. ''பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம். பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்'' என்று ஏற்றுப் போற்றுகிறார்.

தவறு செய்தவன் தன் ஒரே மகனாக இருந்தாலும், அவனுக்கும் ஒரு குடிமகனுக்கு வழங்கப்படுவதற்கு மேலான சலுகை எதையும் வழங்க முடியாது என்பதைத்தானே மனு நீதிச் சோழன் வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

உலகில் எல்லோராலும் இது முடியாது என்று ஒதுக்கிய செயலைச் செய்து காட்டுவேன் என்று முயன்று வெற்றி பெற்றவர்களே பெரியவர்கள். ஏனையோர் - அவ்வாறு முயலாது சோம்பிக் கிடப்போர் அனைவரும் சிறியவர்களே!

இடைப்பட்ட நிலை என்று ஒன்று இல்லை.

சேக்கிழார் போன்ற சமய நூல் ஆசிரியர்கள் சமய வரலாறு பேசி சமூகத்தை மேலெடுத்துச் செல்லும் முயற்சியை மேற்கொண்டவர்கள். நம் வணக்கத்துக்கு உரியவர்கள். நாமும் பெரியவர்களாக உயர முற்படுவோம். இன்னும் ஒரு பெரியபுராணம் மலரட்டும்.

★★★

ஏன் உறக்கம் கொண்டனையோ?

– கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

கார்மேகக் கண்ணா உன்
    கண்ணுறக்கம் போதாதோ?
கார்மேகம் கண்திறந்தால்,
    கசிந்துமழை பொழியாதோ?
பார் முழுதும் மழையின்றிப்
    பரிதவிக்கும் ஓசைமழை
ஊர் முழுதும் பெருக்கெடுத்தும்,
    உன்காதும் ''உறங்கியதோ?'' 1

நீர்சுரந்து நிலம்செழிக்க
    நின்கண்கள் இமைதிறவாய்!
நீர்எடுக்கப் 'போர்' தொடுக்கும்
    நிலைமாறக் கண்திறவாய்!
தேரோட்டிக் களம்வென்றாய்!
    திசைஎல்லாம் நீர்வளத்தால்,
பார்செழித்து வளம்பெருக,
    படுத்தபடி கண்திறவாய்! 2

நின்உறக்கம் நீண்டுவிடில்,
    நிலஉலகில் இருள்சூழும்!
நின்உறக்கம் நீங்கிவிடில்,
    நிலஉலகில் ஒளிபரவும்!

உன் ''உறக்கம்'' உணராதார்,
    ''உறக்கநிலை'' மாறவிடார்!
அன்னவரின் மருள்போக்க,
    அண்ணலேநீ கண்திறவாய்! 3

ஏனுறக்கம் கொண்டனையோ?
    எடுத்தறிய முடியவில்லை!
மானுடரின் மதிக்குஎட்டா
    மன்னவனே கண்திறவாய்!
ஊனுயிரின் ஓட்டமெலாம்,
    ஒடுங்குமுன்னே கண்திறவாய்!
நானுமுன்றன் கண்திறக்க
    நாடிவந்து காத்திருந்தேன். 4

காலைமாலை நாமாவளி,
    காத்து காத்துச் சொல்லிவைத்தேன்
வேளாவேளை அர்ச்சனைகள்
    விதவிதமாய்ச் செய்துவைத்தேன்
ஏழைஎன்னை நீஎன்றும்,
    எடுத்தாள அர்ப்பணித்தேன்
வேளைஇன்னும் வரவில்லையோ?
    விழித்தெனக்கு அருள்புரியே. 5

★★★

அவ்வையார் எழுதிய கணபதி ஆசிரிய விருத்தம்

- முனைவர் தாயம்மாள் அறவாணன்
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

அவ்வையார்கள் எழுவருக்கு மேல் இருக்கலாம். அதியமான், அவன் மகன் பொகுட்டெழினி, நாஞ்சில் வள்ளுவன், சேரமான் மாவெண்கோ, பாண்டியன் கானப் பேர் தந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி முதலான சங்க கால அரசர்களைப் பாடிய **சங்க அவ்வை;** தனிப் பாடல்கள் பல பாடிய அவ்வை; ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் மூதுரை, நல்வழி பாடிய அவ்வை, அட்டாங்க யோகக் குறள், ஔவை குறள் பாடிய அவ்வை, அசதிக்கோவை பந்தனந்தாதி பாடிய அவ்வை, ஔவை நிகண்டு பாடிய அவ்வை என்று அவ்வையார்கள் பலர் வாழ்ந்திருக்கலாம்.

காப்பியர், கபிலர், பரணர், பெருந்தேவனார், நக்கீரர், பட்டினத்தடிகள், கம்பர் ஆகிய தமிழ் இலக்கிய வரலாற்று இமயப் படைப்பாளிகளின் பெயர்கள், அவர்தம் அரும்பெரும் செயல்கருதிப் பின்னாளிலும் தமக்குப் பெயர் வைத்துக் கொள்ளுதல் மூலம் போற்றப்பட்டதும் உண்மை. இப்போற்றுதலால் யார் முதலாமவர், யார் இரண்டாமவர் என்று ஓரளவு குழப்பம் ஏற்பட்டதும் உண்மை. தமிழக அரசர் வரலாற்றிலும் ஒரே பெயர் பிற்காலங்களிலும் வைக்கப் பட்டமையால் முதல் இராசராசன், முதல் இராசேந் திரன், முதல் குலோத்துங்கன் எனவும், தொடர்ந்து இரண்டாம், மூன்றாம் இராசராசன், இராசேந்திரன், குலோத்துங்கன் எனவும் வேறுபடுத்திக் கொண்டது வரலாற்றுச் செய்தி.

தமிழிலக்கிய வரலாற்றில், அவ்வையார் பெயரைப் பல்வேறு காலங்களில் பல்வேறு படைப்பு களில் மூலவராகக் காணும்போது கடும் குழப்பம் மிஞ்சுகிறது. எந்த அவ்வையார் எந்தப் படைப்பைப் பாடினார் என்பதை ஐயம் திரிபறத் துணியக்கூட வில்லை. மெய்யான முதலவ்வை வாழ்வு மெய் நிகழ்ச் சிகளைப் பின் வந்த அவ்வையார் படைப்புகளும், தம் கால நிகழ்ச்சிகள் போல் பேசுகின்றன. இதனால் குழப்பம் இன்னும் மிகுகின்றது.

வள்ளல் அதியமான் வாழ்வோடு தொடர்பு கொண்டது முதல் அவ்வை வாழ்க்கை. சங்க இலக் கியத்தில் கபிலர்க்கும் பரணர்க்கும் அடுத்தபடியாக அவ்வைக்கு மிகுதியாக பாடல்கள் (அகம் 26 + புறம் 33 = 59 பாடல்கள்) உள்ளன.

மக்களிடையே பெரும் புகழ்பெற்ற மன்னன் அதியமானின் அரசியல் தூதுவராகத் தொண்டை மானிடம் செல்லும் யாருக்கும் கிட்டாத தனி வாய்ப்பு அவ்வைக்குக் கிடைத்தது. அவ்வை தம் பாப்புனையும் பெருந்திறனால் பெரும் புகழ் எய்தி இருந்தார். அதிய னின் நட்பு, தூதுவராகச் செல்லும் அளவுக்கு அரசியல் சாணக்கியம் ஆகியன அவ்வைக்கு ஒருசேர இருந்தன. எனவேதான் சாகாக்கனி ஆன நெல்லிக்கனியைத் தான் உண்ணாமல் அவ்வைக்கு அதியமான் நல்கி இருத்தல் வேண்டும். எனவே அவ்வையின் பெயர் தமிழ் இலக் கிய உலகிலும், அரசியல் உலகிலும், பெண் உலகிலும் கொடிகட்டிப் பறந்த பெயராகச் சங்க காலத்தில் இருந்திருத்தல் வேண்டும். எனவே பின் வந்தோரும், தமக்கு முன் வாழ்ந்த பெருமைக்குரிய பெயரைச் சூட்டிக்கொள்ள (அத்தகைய தகுதிகள் இல்லையே னும்) விழைந்தனர் போலும். ஒருவர் பெயரைப் பல ரும் பல்வேறு காலங்களில் வைத்துக் கொள்கிறார்கள் என்றால் முதலில் அப்பெயர் கொண்டவர், மிகுபுகழ் பெற்றவராக இருந்திருக்க வேண்டும். மீண்டும் மீண்டும் அப்பெயரைப் பலர் வைப்பதற்கு, அதுவே காரணம் ஆகலாம்.

தமக்குப் பின் வருவோர் தாம் எழுதிய பாடலை வாசித்துச் சுவைக்க வேண்டும் எனும் விருப்பம் தம் பெயரில் பாப் புனைந்து தனி நூல் வெளியிடுதலை விட, முன்னைப் பெருமை வாய்ந்தோர் பெயரில் தாம் எழுதிய பாடலை இரண்டறக் கலந்து செருகிவிட்டால் மேற்கண்ட பயன் மிகுதியும் கிடைக்கும் என்ற பொல் லாத ஆர்வம் சிலருக்கு இருந்தது. அத்தகையோர், தாம் எழுதிய பாடலைப் புகழ்பெற்ற முன்னையோர் பாட லுடன் இடையிலே செருகி விட்டதைக் கம்பனின் கம்ப ராமாயணம், வில்லிப்புத்தூராரின் பாரதம் முதலா யின காட்டுகின்றன. இப்போக்கிலும் பிற்காலத்து வந்தோர் முற்கால நிகழ்ச்சிகளைப் புனைந்து அவ்வை பாடலோடு கலந்திருத்தல் வேண்டும். அவ்வை-

அதியமான், அவ்வை-பாரி மகளிர் மணம் பற்றிப் பிற்கால வெண்பாவில் பாக்கள் எழுதி, அவ்வையார் பெயரில் உலவ விட்டுவிட்டனர். சிலர் கூடுதலான நிகழ்ச்சிகளையும் புனைந்துவிட்டனர். முற்கால நிகழ்ச்சியும் பின்னோர் புனைந்த நிகழ்ச்சியும் ஒன்றாக இருத்தலால், எந்த அவ்வையார் பாடியது என்ற குழப்பம் ஆராய்ச்சியாளருக்கு எஞ்சுகிறது.

தனிப்பாடல் திரட்டு, ஆத்திச்சூடி முதலான நூல்கள், விநாயகர் அகவல், அவ்வை குறள், அட்டாங்க யோகக் குறள், தரிசனப் பக்தி, கணபதி ஆசிரிய விருத்தம், நீதி ஒழுக்கம், கல்வி ஒழுக்கம் முதலாய நூல்கள் வேறுவேறு கால அவ்வையார்களால் படைக்கப்பட்டுள்ளன. யாதொன்றிலும் அவ்வையார் பற்றிய வரலாறு இடம்பெறவில்லை. தற்சிறப்புப் பாயிரம், சிறப்புப் பாயிரம், அவையடக்கம் முதலான இலக்கிய முகப்புகள் இலக்கிய வரலாற்றுக்கு இன்றியமையாதன. இவை இடம்பெறாமையால் வேறு வேறு அவ்வையாரைத் துல்லியமாக வேறுபடுத்திக் காண்பது அவ்வளவு எளிதாக இல்லை. பாவின் வடிவம், சொல்வழக்கு, நிகழ்ச்சித் துணுக்குகள், பெயராட்சிகள், பாடு பொருள்கள், சமயச் சார்பு, சார்பின்மை முதலியவற்றைக் கொண்டே இன்னின்ன காலத்தில் இன்னின்ன படைப்பு எழுதப்பட்டிருக்கலாம் என உய்த்துணர முடிகிறது.

மேற்கண்ட பின்னணியில் 'கணபதி ஆசிரிய விருத்தம்' என்று அவ்வையார் எழுதியதாகச் சுட்டப்படும் நூல் இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. சமய அவ்வை கணபதி, முருகன், சிவன், இலட்சுமி, நான்முகன், திருமால், உமை, சரசுவதி என்று பல கடவுளரையும் போற்றுபவர் என்று தெரிகிறது. நான்முகனாம் கணபதியைத் தமிழ் பாடல்களில் போற்றுகிறார்.

ஒருகொம் பிருசெவி மும்மதத்து நால்வாய்
கரியுருவை கங்காளன் காளாய்! – பரிவுடனே
கண்ணால ஓலை கடதெழுத வாராயேல்
தன்னாண்மை தீர்ப்பன் சபித்து. (த.பா.தி. 62)

என்று பெண்ணின் திருமண மண ஓலை எழுத விநாயகனை அழைத்துப் பாடப்பட்டதாகத் தனிப்பாடல் விளக்க உரை சுட்டும். (அங்கவை சங்கவை என்னும் பெண்களைச் சோழனுக்கும் பாண்டியனுக்கும் மணம் செய்விக்கிறபோது (சிலர் தெய்வீகனுக்கு மணம் முடிக்கிறபோது என்றும் சுட்டுவர்) விநாயகரை ஓலை எழுத அழைக்கும் பாட்டு என்றும் சுட்டுவர்.

நல்வழி என்ற நூலில் கடவுள் வாழ்த்துப் பாடும் போது கணபதியிடம் சங்கத் தமிழ் மூன்றும் தா என்று அவ்வை கேட்கிறார்.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் – கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

- நல்வழி, கடவுள் வாழ்த்து

என்பது அப்பாடல். தும்பிக்கையான் பாதம் சேர்பவருக்கு வாக்கு, மனம், இறைவன் நோக்கு இவை கிட்டும் என்று சுட்டுகிறது மூதுரை கடவுள் வாழ்த்துப் பாடல்.

வாக்கு உண்டாம்: நல்ல மனம் உண்டாம்: மாமலராள்
நோக்கு உண்டாம்: மேனி நுடங்காது: – பூக்கொண்டு
துப்பு ஆர்திரு மேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

- மூதுரை - கடவுள் வாழ்த்து

என்று விநாயகனைப் போற்றுகிறது இப்பாடல்.

விநாயக வழிபாட்டிற்குத் தனியாக வேழமுகம், விநாயகர் அகவல், கணபதி ஆசிரிய விருத்தம் ஆகிய நூல்களை இயற்றியவர் அவ்வை. அவ்வை விநாயகனை வழிபட்டு முதுமை அடைந்ததாக அவ்வையார் திரைப்படம் நமக்குக் காட்டும். வாதாபியிலிருந்து கணபதி இங்கே வந்ததாகவும் அப்போதுதான் விநாயகர் வழிபாடு இங்கே பரவியதாகவும் ஆய்வாளர் கூறுவர். சேரமான் பெருமாளுக்கு முன்பே அவ்வையை விநாயகர் தம் துதிக்கையில் ஏந்திக் கயிலாயம் கொண்டு போய் விட்டதாகக் கதை வழங்குகிறது. கயிலாயம் செல்லக் காரணமாக இருந்த விநாயகருக்காக விநாயகர் அகவல் செய்தாராம் அவ்வை என்ற கதையும் உண்டு. அவ்வை அகச் சமயங்களை மதித்தவர். புறச்சமயக் காழ்ப்பும் இல்லாதவர். தெய்வத்தை வெறுக்காதே என்னும் பொருளில் 'தெய்வம் இகழேல்' என்று உரைத்தார்.

கணபதி ஆசிரிய விருத்தம் மொத்தம் பதினோரு பாடல்களைக் கொண்டது. கணபதியிடம் பலவற்றைத் தா என்று கேட்கிறார் அவ்வை.

துதிகொண்ட நின்னடி தொழுமுங்கருணை தா!
தமிழ் தொடுக்கின்ற வெகுவித்தை தா
துன்பங்கள் அணுகாத இன்பங்கள் தா சுகசீவனப்
பெருமைதா!
பதிகொண்ட புத்திர மித்திர – களத்திராபதியர் பரிந்துதவ
வந்தவரெலாம்
பசியாற வெப்பொழுது முசியாமலன்னம் படைக்கின்ற
கனபவுசுதா!

....



கணபதியை ஒரு கையில் மாதுளங்கனியையும், மறுகையில் தண்டு, தனு, சூலம் இவை ஏந்தியும் வல்லபையை இடப்பாகத்தில் கொண்டும் முப்பழம், அப்பம் நுகரும் யானைத் திருமுகவனே என்று அழைத்துச் சொல்லும் பாடல் நயமுடையது.

'மாதுளங்கனி ஒருகை தண்டொருகை தனுவொருகை மன்னு
மொளிர் சூலமொருகை
வலிய சக்கரமொருகை வளமிலகு புண்டரிக மலரொருகை
கயிறொருகைநீர்
மிிலுற்பல மொருகை சோதிநெற்கதி ரொருகை வெண்கோடு
மொருகை நடுவே
வீசிய துதிக்கையிலரத்தின கலசத்துடன் விளங்கியே
யெனையாளுவாய்

தாதளக வல்லபை இடப்பாகனேயமரர் தலைவனே சகநாதனே
சருவ வசிகரமுதவு பெருமதிரி நயனமுள சந்திரசேகர விகிர்தனே
கோதறு செழும்பாகுமுப் பழமோடப்பநுகர் குஞ்சரத்
திருமுகவனே குணபதி ஸ்ரீமகாகணபதி விகடதட கும்பகெம்பீர
தரனே

(பாடல் 7)

இன்னொரு பாடலும் மிகவும் நயமாக அமைந்துள்ளது.

வீமனெனவோ தனுவில் விசயனெனவோகனக
மேருவெனவோ மயிலின்மேல்
வீரனெனவோ கொடிய சூரனெனவோ வுக்கிர விக்கிர
மாதித்தனெனவோ
காமனெனவோ பெரியசோமனெனவோ கொடைக் கன்ண
னெனவோ உனையெனாக்
கடையரிற்கடையரைப் புகழ்சொல்லியவர் வாயில்
காவாதபடி அருளுவாய்
சாமணி சவுந்தரி திரியட்சிபகவதி குமரி சங்கரி பரம்பரி
நிராதரி கௌரி
மகமாயி பரிபுரமணித்தில செரண் வனசக் கொங்கையாள்
கோமளி பவானிபரை யாமளையளித்தவா குஞ்சரத்
திருமுகவனே
குணபதி ஸ்ரீமகா கணபதி விகடதட கும்பாகம்பீரதரனே

(பாடல் 8)

மேற்கண்ட பாடல் நயமுடன் சிறப்பாக அமைந்துள்ளது. ஆக விநாயகக் கடவுள் மீது நல்ல பல பாடல்களைப் பாடியவர் அவ்வை என்பதை உணரலாம். கணபதி ஆசிரிய விருத்தம் அவ்வையார் பாடியதா அல்லது அவ்வை பெயரில் வேறு யாராவது பாடினார்களா என்று சிந்திக்க வேண்டும்.

★★★

தளர்ச்சிக்கு ஊன்றுகோல் இறைவன்

- பெ. தங்கத் திருமூலர்

வயதால் முதுமைப் பருவம் எய்தியும் நரை ஏதும் இன்றி இளமைத் தோற்றப் பொலிவுடன் திகழ்ந்த சங்க காலப் பெருங்கவிஞர் பிசிராந்தையாரின் பாடல் வரிகளை நம்மில் பலரும் அறிந்திருப்போம்.

''யாண்டு பலவாக நரைஇல ஆகுதல் யாங்கு?''

என்று வினவிய புலவர் பெருமக்களுக்கு அவர், எல்லா சூழலிலும் இளமையாக இருக்க ''பதற்றமற்ற இனிய வாழ்வே'' இளமைதரும் எனக் கூறியுள்ளார்.

ஒய்வு என்பது உடம்புக்கு மட்டும் அல்ல. மனதிற்கும் ஓய்வு அளிக்க வேண்டும். அதுவே உண்மையான ஓய்வு.

நோய் என்பது பிணி மட்டும் அல்ல. (1) பதற்றம், (2) வருத்தம், (3) மறதி போன்ற பிற குணங்களும் ஒரு வரை நோகடிப்பன.

ஒவ்வொரு மனிதனும் முதுமையில் ஆன்மீகத்தை நாடுதல் இயற்கை. அதை இளமையில் நாடினால் இன்பப் பிழை இருக்காது. உடலில் நோய் கூறுகள் புலப்படாது.

இரும்பிலிருந்து துரு தோன்றினாலும் அத்துருவே அந்த இரும்பை அரித்துவிடும். அதைப் போன்று அறநெறி தவறும்போது அச்செயல்களே அவச்செயல் புரிவோரை அழித்துவிடும்.

15 வயதில் கல்வியில் கருத்தைச் செலுத்த வேண்டும். 30 வயதில் உறுதி உடையவனாக இருக்க வேண்டும். 40 வயதில் சந்தேகங்கள் இருக்கக் கூடாது. 50 வயதில் ஆண்டவன் கட்டளையை நன்கு அறிந்திருக்க வேண்டும். 60 வயதில் காது உண்மையையே கேட்க வேண்டும். பொய்யை ஒரு பொருட்டாக எண்ணக்கூடாது. 70 வயதில் உள்ளம் விரும்பியதைத் தளர்வின்றி பின்பற்ற வேண்டும். 1330 குறளையும் ஒரு குறளில் சொல்வதாயின்

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற''

எனக் கூறலாம்.

பல உணர்ச்சிகள் நம் உள்ளத்தை பதற்றத்திற்குள் (Tension) ஆக்கி மனத்தளர்ச்சியை ஏற்படுத்தி உடம்பைத் தளரவைத்து முதுமையை ஏற்படுத்துகின்றன. இதை தீய அறுகுணங்கள் என்கின்றனர். அறுகுண சீரமைப்புச் செய்ய வேண்டும். ஆறு குணங்களாவன ''காம, குரோத, லோப, மோக, மத, மாச்சர்யங்கள் (காமம், வெறுப்பு, ஆசை, பேராசை, ஆணவம், பொறாமை).

இதைத் திருஞானசம்பந்தர்,

''அஞ்சும் ஒன்றி ஆறுவீசி நீறு பூசி
குஞ்சி ஆற வந்திசெய்ய அஞ்சலென்னி மன்னும் ஊர்
பஞ்சியாரு மெல்லடி பணைத்த கொங்கை சிற்றிடை
அஞ்சொலார் அரங்கெடுக்கும் அந்தண் ஆரூர்என்பதே''

ஐம்பொறிகளை அடக்கி, அறுகுண சீரமைப்பு செய்ய வேண்டும் என்கிறார்; தலையார இறைவனை வணங்க வேண்டும். அப்போது அச்சமில்லை. நடந்து முடிந்ததை மீள நினைந்து வருந்துதல் கூடாது என பட்டினத்தடிகள் கூறும் புத்திக்கூர்மை வாழ வழி செய்கிறது.

''நான் எத்தனை புத்தி சொன்னாலும் கேட்கிலை
நல்நெஞ்சமே
ஏன் இப்படி கெட்டு உழலுகின்றாய் இனிஏதும்இல்லா
வானத்தின் மீனுக்கு வன்தூண்டில் இட்ட வகையதுபோல்
போனத்தை மீழ நினைக்கின்றனையே என்ன புத்திஇதே''

மனமே என் பேச்சை கேட்கமாட்டாயா? நான் எவ்வளவு உன்னிடம் சொன்னாலும் மீண்டும் கடந்து

போன விஷயங்களையே நினைந்து வருந்துகிறாயே. வேண்டாம் இந்த விபரீதம்.

வள்ளுவர்: உவமை கூற முடியாதவன் இறைவன்.

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்
கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''

என்று பாடியுள்ளார்.

எல்லா பழத்துக்கும் கொட்டையை உள்ளே வைத்தான். ஒரு பழத்துக்கு மட்டும் வெளியே வைத் தானே. நாம் 'ஏன்' என்று கேட்க முடியுமா? ''அதுதான் தனக்குவமை இல்லாதவன் செயல்.

நாவுக்கரசர்:

சுண்ணவெண் சந்தனச்சாந்தும் சுடர்த்திங்கள்
சூளாமணியும்
வண்ணயுரிவை உடையும் வளரும் பவளநிறமும்
அண்ணல் அரண்முரணேறும் அகலம் அளாய அரவும்
திண்ணங் கெடிலப்புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும்
இல்லை.

'நாமார்க்கும் குடி அல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்
ஏமாப்போம் பிணிஅறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை

நாம் அஞ்சாமல் பதற்றமின்றி வாழ வழி செய் பவன் இறைவன் ஒருவனே.

பாரதியார்:

நாணத்தை கவலையினை, சினத்தை, பொய்யை
அச்சத்தை வேட்கைதனை அழித்துவிட்டால்
அப்போதே சாவும் அங்கே அழிந்துபோகும்!
மிச்சத்தை பின்சொல்வேன் சினத்தை
முன்னே வென்றிடுவீர் மேதினியில் மரணமில்லை

வயோதிகத்தால் தளர்ச்சி:

மனதைக் கவலை இன்றி வைப்பதற்கு விளை யாட்டு, புத்தகம் படித்தல், இசைகேட்டல், தொழில் ஆர்வம் போன்ற எவ்வளவோ முறைகள் இருந்தும், இறைவழிபாட்டையே நம்முன்னோர் வலியுறுத்து கின்றனர்.

இதில்

I பக்தியோகம், ஞானயோகம், கர்மயோகம்
II இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி
III சரியை, கிரியை, யோகம், ஞானம்
IV சத்து, சித்து, ஆனந்தம் (சச்சிதானந்தம்)

பக்தியோகத்தில்: முதுமை பற்றி

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான ஐயடிகள் காடவர்கோன் முதுமை வராமல் இருக்க வழி சொல்கிறார்.

''குயிலொத்த இருள் குஞ்சி கொக்கொத்து இருமல்
பயிலப் புகா முன்னம் நெஞ்சே - மயிலைத்
திருப்புன்னையங்கானல் சிந்தியாயாகில்
இருபின்னை அங்காந்து இளைத்து''

திருமயிலைத் தலத்தை நினைந்து, சிவனை நினை யாவிடில் முதுமை வரும்; சொல்வதைக் கேள், மனமே! இல்லையெனில் உன் இஷ்டம். நான் சொல்வதைச் சொல்லிவிட்டேன் எனக் கூறும் பாங்கு அருமை.

''கிளரொளி இளமை கெடுவதன் முன்னம்
வளரொளி மாயோன் மருவிய கோயில்
வளர் இளம் பொழில் சூழ் மாலிரும் சோலை
தளர்விலராகில் சார்வது சதிரே''

''ஓயும் மூப்புப் பிறப்பு இறப்பு பிணியும்
வீயுமாறு செய்வான்' திருவேங்கடத்
தாயன், நாள் மலராம் அடித்தாமரை
வாயுள்ளும் மனத்துள்ளும் வைப்பார்கட்கே''.

''பாதம் நாளும் பணியத் தணியும் பிணி
ஏதம் சாரா எனகேல் இனி என்னகுறை
வேதநாவலர் விரும்பும் திருக்கண்ணபுரத்து
ஆதியனை அடைந்தார்க்கு அல்லல் இல்லையே''

அவன் பாதம் பணிபவர்க்கு மூப்பு, பிறப்பு, இறப்பு, பிணி தொலைந்து போகும்.

திருமூலர்: இளமையில் தொழு

''நிற்கின்ற போதே நிலையுடையான் கழல்
கற்கின்ற செய்மின் கழிந்துறும் பாவங்கள்
சொற் குன்றலின்றித் தொழுமின் தொழுதபின்
மற்றொன்றிலாத மணிவாசகமே''

''கற்றதனால் ஆயபயன்என் கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின்''

என வள்ளுவம் பேசுகிறது.

மூலாதாரத் தவம்

மூலத்துவாரத்தை முக்காரமிட்டிரு
மேலைத் துவாரத்தில் மேல்மனம்வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லும் கருத்திது தானே.

நாபிக்குக் கீழே பன்னிரெண்டங்குலம்
தாபிக்கும் மந்திரம் தன்னை அறிகிலர்
தாபிக்கும் மந்திரம் தன்னை அறிந்தபின்
கூவிக் கொண்டு ஈசன் குடிஇருந்தானே.

பிராணாயாமம்

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்கு
கூற்றை உதைக்கும் குறி அதுவாமே.

எங்கே இருக்கினும் பூரி இடத்திலே
அங்கே அதுசெய்ய ஆக்கைக்கு அழிவில்லை
அங்கே பிடித்து விட்டளவும் செல்ல
சங்கே குறிக்கத் தலைவனுமாமே.

காற்றை 16 நொடிகள் உள்ளே இழுத்து 64 நொடிகள் அடக்கி 32 நொடிகள் வெளியே விடக் கற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்கு இணை யாரும் இல்லை.

வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியகுருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனுமாமே.

பிராணாயாமம் செய்யச் செய்ய எடை இளைத்து காற்றில் மிதக்கலாம் என்பது கருத்து. மலை ஏற்றம் செய்வது போல் அதற்கென்றே வாழ்ந்து கின்னஸில் இடம் பெறணும். அதற்கு யாரும் முன்வருவதில்லை. அதனால் காற்றில் மிதக்க முடியாது என்று யாரும் சொல்லிவிட முடியாது.

நோய்கள்

வீங்கும் கழலை சிரங்கொடு குட்டமும்
வீங்கும் வியாதிகள் சோகை பலவதாய்
வீங்கிய வாதமும் கூறும் முடமதாம்
வீங்கும் வியாதிகள் கண்ணில் மருவியே!

வியாதிகள் பல. கண் சரியாக பாதுகாக்கப்பட்டால் ஏனைய உறுப்புகளும் பாதுகாக்கப்படும். உயிர்க் காற்று உடம்பில் பெருகி, வீங்கற் காற்று விலக வேண்டும். அப்போது வீங்கும் வியாதிகள் வராது. அதற்கு, யோகக் கலைகள், பிராணாயாமம், இறை வழிபாடு மிக மிக அவசியம்.

★★★

காஞ்சியில் சிறந்த ஏழு தீர்த்தங்கள்

1. இஷ்டசித்தி தீர்த்தம்
2. சிவகங்கை தீர்த்தம்
3. மங்கல தீர்த்தம்
4. இந்திர தீர்த்தம்
5. தாயார் குளம்
6. உலகாணித் தீர்த்தம்
7. சர்வ தீர்த்தம்

திருநின்றவூரில் நின்றருளும் பெருமாளும் ஈஸ்வரரும்

- சிவநேசன்

1. அருள்மிகு பக்தவச்சலப் பெருமாள் திருக்கோயில், திருநின்றவூர்

திருவாகிய திருமகள் வந்து நின்று தவம் புரிந்த தலம் ஆதலால் திருநின்றவூர் என்று பெயர். திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி வட்டத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. பூவிருந்தவல்லியிலிருந்து பேருந்தில் வந்தால் திருநின்றவூர் இராமர் கோயில் பஸ் நிறுத்தத்திலும், உயர் நீதி மன்றத்திலிருந்து வருபவர்கள் திருநின்றவூர் இரயில் நிலையத்திலும் இறங்கித் திருக்கோயிலை அடையலாம்.

இத்திருக்கோயிலின் முன்புறம் தோப்பும், பிற்காலச் சோழ, விஜய நகர காலத்தை சார்ந்த இராஜ கோபுரமும் அமைந்துள்ளது. ஆகம முறைப்படி பலி பீடம், கொடிமரம், சிறிய திருவடி சன்னதி, ரங்க மண்டபம் என்னும் மகாமண்டபம், உள்மண்டபம், திருவுண்ணாழிச்சுற்று என்ற அமைப்பில் உள்ளது. திருமால் திருமகள், பூமகளுடன் நின்ற கோலத்தில் பஞ்சாயுதம் தாங்கி சுமார் பதினோரு அடி உயரத்தில் காட்சி தருகிறார். மூலவர் மற்றும் உற்சவர் திருநாமம் அருள்மிகு பக்தவத்சலப் பெருமாள் ஆகும். மூலவர் பெருமாளின் வலதுபுறம் தாயார் சன்னதி உள்ளது. வருண பகவான் உலகத்தைக் காப்பவன். அவனைக் காப்பவள் இலக்குமிதேவி. அவளை வருணன் 'என்னைப் பெற்ற தாயே' என அழைத்ததால் 'என்னைப் பெற்ற தாயார்' என்ற திருநாமத்துடன் தாயார் அமர்ந்த கோலத்தில் எழுந்தருளுகிறார்.

புராதனமான சுதர்சன ஆழ்வார் சன்னதியும், ஆதிசேஷனுக்கு என உருவோடு கூடிய ஆதிசேஷன் தனிசன்னதியும் உள்ள ஒரே தலம். ஆண்டாள், ஆழ்வார்கள், அனுமார், ஏரிகாத்த ராமர் ஆகிய தனி சன்னதிகளும் உள்ளன.

தினமும் காலை 7.30 முதல் 11.30 வரையும், மாலை 4.30 முதல் 8.30 வரையும் தரிசனத்திற்காகவும், பூசைக்காகவும் சன்னதிகள் திறந்திருக்கும். பாஞ்சராத்திர ஆகமம், விமானம் ஸ்ரீநிவாச விமானம், தல விருட்சம்



பூச்சொரியும் பாரிஜாதம் எனப்படும் பவளமல்லி. தீர்த்தம் வருண புஷ்கரணி எனப்படும். இத்தலத்தில் தரிசிப்பதற்கு ஒவ்வொரு பவுர்ணமி, உத்திரம், திருவோணம், வெள்ளி, சனிக்கிழமைகள் மிகவும் உகந்த நாட்களாகும்.

ஆழ்வார்கள், ஆச்சாரியார்களின் திருநட்சத்திரங்கள், சித்ரா பௌர்ணமி, ஆனிகருடன், ஆடிகருடன், பவித்ரோத்சவம், புரட்டாசி சனிக்கிழமைகள், திருக்கல்யாண உற்சவம், தீபாவளி, திருக்கார்த்திகை, தனுர் மாதம், பகல் பத்து, இராப்பத்து, வைகுண்ட ஏகாதசி பரமபதவாசல் திறப்பு, போகி, திருக்கல்யாணம், தைப்பொங்கல், கனு பார்வேட்டை, இரதசப்தமி, மாசி மகம், பங்குனி மாதம் பத்து நாட்கள் பிரம்மோற்சவத் திருவிழாவும், அதன் மூன்றாம் நாள் அதிகாலை கருட சேவையும், ஏழாம் நாள் திருத்தேரும் பத்தாம் நாள் சப்தாவர்ண உற்சவமும் மிகச் சிறப்பானவை.

திருமங்கை ஆழ்வார் இக்கோயிலை கடல் மல்லையைப் பாடும்போதும், திருக்கண்ண மங்கையைப் பாடும் போதும் இரு பாடல்களில் 'நின்றவூர் நின்ற நித்தலத்தை' எனவும் 'நின்றவூர் நித்திலம்' எனவும் மங்களா சாசனம் செய்து பாடுகிறார்.

2. அருள்மிகு இருதயாலீஸ்வரர் திருக்கோயில், திருநின்றவூர்

இக்கோயில் திருநின்றவூர் அருள்மிகு பக்தவச்சலப் பெருமாள் திருக்கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள திருக்கோயிலாகும். புகைவண்டி நிலையத்திலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் அமைந்து உள்ளது. பூவிருந்தவல்லியிலிருந்து வரும் பேருந்தில் பெருமாள் கோயில் நிறுத்தத்தில் இறங்கி 200 அடி நடந்தால் திருக்கோயிலை அடையலாம்.

அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவரான பூசலார் நாயனார் வரலாற்றோடு தொடர்புடைய திருக்கோயிலாகும். ராஜசிம்ம பல்லவன் கட்டிய கைலாசநாதர் கோயிலுக்கு குடமுழுக்கு நாள் குறிக்க, இறைவன் மன்னன் கனவில் தோன்றி அதே நாளில் பூசலார் நாயனார் கட்டியுள்ள கோயில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ள இருப்பதாகத் தெரிவித்தார். மன்னன் கும்பாபிஷேகம் நடக்கும் கோயிலைக் காண திருநின்றவூர் வர பூசலார் நாயனாரை அழைத்து விசாரித்தபோது பூசலார் நாயனார் தம் மனதிற்குள் கோயில் கட்டியதைக் குறிப்பிட்டார். அதே நாளில் குடமுழுக்கு செய்யத் தீர்மானித்திருப்பதையும் தெரிவித்தார். அவரது அவாவினைப் பூர்த்தி செய்யும் வகையில் திருநின்றவூரில் ஆலயம் ஒன்றை எழுப்பி குடமுழுக்கும் மன்னன் செய்வித்தான். அத்திருக்கோயில் இன்றும் இருக்கிறது. தவிர மனதிற்குள் ஆலயம் எழுப்பிய மகானை சிவலிங்கத்தை வணங்கும் வகையில் ஒரு கோயிலில் அமைத்தான். அக்கோயில் மனதிற்குள் ஆலயம் எழுப்பிய 'மன ஆலய 'ஈஸ்வரர்' என்பது மாறி 'இருதய ஆலய ஈஸ்வரர்' என வடமொழியாக்கம் பெற்றது.

'கஜபிருஷ்டம்' என்னும் அமைப்பில் தூங்கானை மாட வடிவில் அமையப் பெற்றுள்ள விமானமும் உள்ளது. இத்திருக்கோயிலில் சுவாமிக்கும், மரகதாம்



பிகை அம்மனுக்கும் தனித்தனி சன்னதிகளும், விமானங்களும், பிரதான வாயில் கோபுரம் கிழக்கு நோக்கியும், மேற்கு நோக்கி சிறிய வாயிலும் உள்ளது. மூலவர் கிழக்கு நோக்கி சிவலிங்க வடிவில் மன ஆலய ஈஸ்வரர் (இருதய ஆலய ஈஸ்வரர்) என்ற பெயருடன் இருக்கிறார். விநாயகர், முருகர், வள்ளி, தெய்வானை, நந்தி தேவர், சண்டிகேஸ்வரர், நடராஜர் சன்னதிகள் தனித்தனியே அமைந்துள்ளன. சிவாகமப்படி ஆறுகால பூஜைகள் நடைபெறுகின்றன. காலை 7 மணி முதல் 12 மணி வரையும், மாலை 5 மணி முதல் 9 மணி வரையும் பொது மக்கள் தரிசனத்திற்காக திருக்கோயில் திறந்திருக்கும். சுக்ரவாரம், பிரதோஷம், கிருத்திகை, ஆருத்ரா, மகாசிவராத்திரி, தைப்பூசம், மகா சங்கராந்தி, பங்குனி உத்திரம் ஆகியவை விசேட தினங்களாகும். இருதய ஆலய ஈஸ்வரர் என்பதால் இருதயம் தொடர்பான நோய்களுக்காக பிரார்த்தனை செய்து கொள்ளும் பழக்கமும் இருக்கிறது. காஞ்சி கைலாசநாதர் ஆலயத்தின் நினைவாக பழமையான கைலாச நாதர் ஆலயம் ஒன்றும் இங்கு உள்ளது.

★★★

அன்னதான மகிமை

தண்டறு சிந்தை தபோதனர் தாம்மகிழ்ந்து
உண்டது மூன்று புவனமும் உண்டது
கொண்டது மூன்று புவனமும் கொண்டது என்று
எண்திசை நந்தி எடுத்துரைத் தானே.

- திருமந்திரம்

அடியார்களுக்கு அன்னதானம் செய்தால் அதனை மூவுலகும் கொண்டாடும் என்கிறார் திருமூலர்.

சென்னை பிருங்கிமலை அருள்மிகு விசாலாட்சி இடங்கொண்ட அருள்மிகு காசி விசுவநாத சுவாமி திருக்கோயில் திருக்குட நீராட்டு விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி பா. வளர்மதி பி.ஏ. அவர்கள் மற்றும் அறநிலையத் துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப. ஆகியோர் பங்கேற்றுத் திருக்குட நீராட்டு விழா மலர் வெளியிடும் காட்சி.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் சாலை, சென்னை - 600 014.